# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 06 அதிர்வு 68 மாசி 2023 editor@ethiroli.com தொ.பே:1800 960 162




# 20 கோடியில் ஊர்வலம்:
# கண்களை விற்று சித்திரம் வாங்கும் இலங்கை!









ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the South Indian Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

# இலங்கை கால்பந்து: சூழ்ச்சியும் ஊழலும் நிழல்யுத்தமும்!



A.R.V.லோஷன்




இலங்கை என்ற இந்தச் சிறிய நாட்டை உலகம் முழுவதும் அறியாதோருக்கும் கொண்டு சேர்த்த மூன்று விடயங்களாக முன்பிருந்தே சொல்லப்பட்டு வருபவை - தேயிலை, யுத்தம், 96 க்குப் பின்னர் கிரிக்கெட்.

1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ண வெற்றிக்குப் பின் கிரிக்கெட் மிகத் தீவிரமாக இலங்கையின் விளையாட்டுத்துறையையும் தாண்டி ஆக்கிரமித்ததனால் ஏனைய விளையாட்டுக்கள் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டன போலாகியமை துயரம் தான்.

இலங்கையில் 90களில் ஓரளவு முன்னேறி வந்திருந்த கால்பந்து, ரக்பி, மெய்வல்லுநர் துறை, கூடைப்பந்து ஆகியனவும் பின் தள்ளப்பட்டன.

அனுசரணையாளரும், பணமும் கொழிக்கும் கிரிக்கெட்டுக்கு முன்னே இவை மாற்றாந்தாய் மனப்பாங்கோடு நோக்கப்பட்டன.

இலங்கையின் கால்பந்தாட்டத் துறையில் தமிழ் பேசும் வீரர்களின் ஆதிக்கம் கழக மட்டத்திலும் தேசிய ரீதியிலும் ஆரம்பகாலம் முதலே இருந்து வந்திருக்கிறது. ஏழைகளின் தோழன் கால்பந்தாட்டம் என்பதாலோ என்னவோ, அதற்கு தமிழர்களோடு எப்போதும் மிக நெருக்கமான உறவு.

கிரிக்கெட்டில் சதாசிவம், வினோதன் ஜோன், ஸ்ரீதரன் ஜெகநாதன், முத்தையா முரளிதரன், ரசல் ஆர்னல்ட், பர்வீஸ் மஹரூப் , அஞ்சலோ மத்யூஸ் என்று விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரே பிரகாசித்தனர் அல்லது உள்வாங்கப்பட்டனர். ஏனைய சில விளையாட்டுக்களில் தமிழ் வீரர்கள்/ வீராங்கனைகளை உள்ளடக்கிய -இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய -அணிகளும் உலக சம்பியன்கள் ஆகியிருந்தன. ஆனால் இவையெல்லாவற்றையும் கடந்து வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு என்ற பேதமின்றி அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் தமிழ் பேசும் வீரர்கள் உள்வாங்கப்பட்ட ஒரு விளையாட்டு என்றால் அது கால்பந்து தான்.

சில போட்டிகளில் இலங்கையின் தேசிய கால்பந்து அணியில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் தமிழ் பேசும் வீரர்களாகவே இருந்திருக்கிறார்கள். தேவேந்திரன், ஆறுமுகம், ஸ்டெயின்வோல், அமானுல்லா, இக்ரம், பியூஸ்லஸ், ஜூட் சுபுன், ரஹ்மான் என்றும் இன்னமும் உலகறிந்த பிரபல வீரர்கள் பலர் இலங்கை அணிக்காகத் தடம் பதித்தவர்கள்.

1980 களின் பிற்பகுதியிலிருந்து 90 களின் மத்திவரை இலங்கை கால்பந்தின் ஏறுமுகம். தேசிய அணியும் கழக அணிகளும் தெற்காசியப் பிராந்திய ரீதியில் பல்வேறு வெற்றிகளோடு தடம் பதித்த காலம். சார்க் போட்டிகள், கழகங்களுக்கிடையிலான அழைப்புப் போட்டிகள் என்று இலங்கை அணியும் சர்வதேசக் கால்பந்து தரப்படுத்தலில் 122 ஆம் இடம் வரை முன்னேறியது. (இது தான் இலங்கை பெற்றுள்ள தலைசிறந்த தரப்படுத்தலாகும்) ரட்ணம்ஸ், ரினோன், சோண்டர்ஸ் போன்ற கழகங்கள் இந்தியா, பங்களாதேஷ், மாலைதீவுகள், தாய்லாந்து, மத்திய கிழக்கு நாடுகள் என்று தம் வெற்றிக்கொடிகளை நாட்டிய காலமது.

அமானுல்லா போன்ற வீரர்களுக்கு சர்வதேசக் கழகங்களின் ஒப்பந்தங்களும் கிடைத்தன.

இலங்கையில் கால்பந்தின் பொற்காலம் அதுவென்று கொண்டாடப்பட்டுவந்த நேரத்தில் தான் 95, 96 காலகட்டத்தில் இலங்கை கால்பந்து சம்மேளனத்துக்கு சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் அதிகரித்த உதவித் தொகைகளும், ஆசிய சம்மேளனத்தின் கவனிப்பும் இலங்கையின் சில பெரு நிறுவனங்களின் அனுசரணையும் கிடைத்தன. அதே கட்டத்தில் தான் இலங்கை கிரிக்கெட்டின் பிரமாண்டமான எழுச்சியும் நிகழ்ந்தது.

ஒரு பக்கம் கிரிக்கெட்டின் மீது அதீத கவனம் திரும்ப, மறுபக்கம் கால்பந்துக்கு கிடைத்த பெரும் நிதியைக் குறிவைத்து நிர்வாகம் (அல்லது நிர்வாகத்தின் ஒரு குழு) இயங்க ஆரம்பிக்க, அப்போதிருந்து இன்று வரை கால்பந்து நிர்வாகத்தைக் கைப்பற்ற நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசியல் மற்றும் மாபெரும் நிதிப் பின்னணியோடு ரத்தம் சிந்தாத ஒரு யுத்தமே இடம் பெற்று வருகிறது.

மணிலால் பெர்னாண்டோவே இலங்கையின் கால்பந்துத் துறையின் ஒரு God father போல நோக்கப்பட்டு வருபவர். 1979 முதல் 1999 வரை அசைக்க முடியாத ஒருவராக இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தலைவராக இருந்தவர். அவரது காலத்தில் தான் முதற்தடவையாக வந்த பெருமளவு நிதி மாயமானது. இலங்கையின் கால்பந்து பிரபலமான அளவுக்கு அபிவிருத்தி அடையவில்லை என்றும் அவரது காலத்தில் பிறரால் உணரப்பட்டது.

போட்டிக்கு யாரும் இல்லாமலேயே மறைமுக அரசியல் ஆதரவோடும் வர்த்தகப் பின்னணிச் செல்வாக்கோடும் மணிலால் வைத்ததே சட்டமாக இருந்தது.

அவரது தரப்பின் ஊழல்கள் அப்போது வெளிப்படுத்தப்படாத நிலையில், 2011இல் ஆசியக் கால்பந்து சம்மேளனப் பிரதிநிதியாக அவர் பதவி வகித்த வேளையில் சர்வதேசக் கால்பந்து ஊழல் மிகப் பிரமாண்டமாக வெடித்த சம்பவத்தில் இலஞ்சக் குற்றச்சாட்டில்அவர் அகப்பட்டபோது, இலங்கை கால்பந்தின் மிக மோசமான ஒரு காலகட்ட்மாக 2011 முதல் 2013 வரையான காலம் அமைந்தது.

மணிலால் FIFA என்றழைக்கப்படும் சர்வதேசக் கால்பந்து சம்மேளனத்தினால் ஆயுட்காலத்துக்குத் தடைசெய்யப்பட்டிருக்கிறார்.

ஆனாலும் அவரது நிழலசைவுகள் இன்னும் இலங்கை கால்பந்தை ஆட்டிவருகின்றன.

அண்மைக்கால கால்பந்து சம்மேளனத் தலைவர்களான ரஞ்சித் ரொட்ரிகோவும், ஜஸ்வர் உமரும் ஒருவர் மீது மற்றவர் தொடர்ந்தும் சுமத்திவரும் பகிரங்கக் குற்றச்சாட்டுக்கள் சாக்கடையைக் கிளறிவிட்டிருக்கின்றன.

ஆசிய சம்மேளனத்திடமிருந்து வரும் பெருநிதி, கால்பந்து அபிவிருத்தித் திட்டத்துக்காகப் பயன்படுத்தப்படுவதற்காக சர்வதேச கால்பந்து சம்மேளனம் வழங்கும் உதவித்தொகை ஆகியன முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமை, அண்மையில் நடந்து முடிந்த உலகக்கிண்ணப் போட்டிகளுக்காக இலங்கைக்கென வழங்கப்பட்ட 43000 அமெரிக்க டொலர் பெறுமதியான ரிக்கெட்டுக்களுக்கு நடந்த கதை, உஸ்பெக்கிஸ்தானில் நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட உலகக்கிண்ணப் போட்டிகளில் இலங்கை பங்கு பற்றாததனால் விதிக்கப்பட்ட 20,000 டொலர் அபராதம், மணிலால் பெர்னாண்டோவின் ஆள் என்று ஜஸ்வர் உமர் குழுவினரால் குற்றஞ்சுமத்தப்படும் ரொட்ரிகோ மற்றும் சகாக்களால் நிகழ்த்தப்பட்ட நிர்வாகச் சீர்கேடுகள் என்று ஊடகங்களில் எல்லாம் இவர்களின் மோதல் சேறு தெளிக்கப்பட்டு, தெருச் சண்டையானது.

இந்தக் காலகட்டத்தில் பல தடவைகள் ஆட்ட நிர்ணய மோசடிகள், கழகக் கால்பந்து மோசடிகள், சர்வதேசப் போட்டிகளில் கலந்துகொள்ள நெருக்கடிகள், இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் என்று மிகக் கேவலமான சம்பவங்களும் பதிவாகின.

அமானுல்லா போன்ற தேசிய ஹீரோக்களும் தடைக்குள்ளாகினர்.

சர்வதேச பயிற்றுவிப்பாளரை இலங்கைக்குக் கொண்டுவருவதும் பின்னர் அவர்கள் பல்வேறு குறைகளைச் சொல்லி இடையே கழன்றுகொள்வதும் ஒருபக்கம், போதுமான வசதிகள் இல்லை என்று இலங்கை அணியின் வீரர்கள் நொந்துகொள்வதுமாக, இலங்கையின் கால்பந்து தரமும் அதிவிரைவாகவே வீழ்ச்சி காண ஆரம்பித்தது.

உலகில் கால்பந்து விளையாடும் 211 நாடுகளில் ஆடவர் அணிகளில் இலங்கை 207 ஆம் இடத்தில் இருப்பது மிகப்பெரிய அவமானம் என்றால் மகளிர் அணியும் இப்போது 155ஆம் இடத்தில்.

திறமையான வீரர்கள் இருந்தும் சர்வதேசப் பயிற்றுவிப்பாளரை ஒப்பந்தம் செய்தும் இலங்கை அணி முன்னேறுவதற்குப் பதிலாக கடைசி இடம் நோக்கிச் சென்றே தீருவேன் என்பது போல வீழ்ந்துகொண்டே செல்கிறது.

2011 முதல் இந்த ஆண்டுவரை சர்வதேச ரீதியாக பல்வேறு தடைகளும் விசாரணைகளும், சம்மேளனத்துக்குள்ளே குத்துவெட்டுக்கள்,

நிர்வாகச் சீர்கேடு காரணமாக விளையாட்டுத்துறை அமைச்சரினால் புதிய தேர்தல், அதற்கு முதல் புதிய யாப்பு பற்றிய சர்ச்சை என்று கால்பந்து கழகங்களுக்கும் ரசிகர்களுக்கும் கால்பந்தே வெறுத்துப் போகின்ற அளவுக்கு படு கேவலமான அரசியல்.

கடந்த 14 ஆம் திகதி கால்பந்து சம்மேளனத் தேர்தல்.

இறுதியாகத் தலைவராக இருந்த ஜஸ்வர் உமர் மீண்டும் தலைவராகத் தெரிவாவார் என்று எதிர்பார்த்த நிலையில் கடைசி நேரத்தில் அவர் போட்டியிட முடியாதென்று விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தடை போட, அவருக்கு எதிராக நிறுத்தப்பட்டிருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் , பல வித சர்ச்சைகளிலும் சம்பந்தப்பட்டிருந்த முன்னாள் ஊடகவியலாளருமான ஜே.ஸ்ரீரங்கா வெற்றி பெற்றுக்கொண்டார்.

ஸ்ரீரங்கா மன்னார் கால்பந்து சம்மேளனத்தின் பிரதிநிதியாக இம்முறை போட்டி போடுவதற்காக முன்னாள் தலைவர்கள் மணிலால், ரஞ்சித் ரொட்ரிகோ ஆகியோரால் முன்னிலைப்படுத்தப்பட்டவர் என்பது அனைவரும் அறிந்ததே.

‘ரங்காவுக்கும் கால்பந்துக்கும் என்ன சம்பந்தம்?’ என்று தமிழ் கால்பந்து வட்டாரங்களும் ஊடகங்களும் அதிர்ந்திருக்க, இந்தத் தேர்தலும் தெரிவும் தன்னைத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்காத காரணத்தினால் செல்லாது என்று நீதிமன்றில் ஜஸ்வர் முறையிட்டதன் காரணமாக ரங்கா தலைமையிலான புதிய நிர்வாகத்துக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது.

எனினும் இந்தத் தற்காலிக தடையுத்தரவானது மேன்முறையீட்டு நீதிமன்ற ஆணை மூலமாக கடந்த வாரம் நீக்கப்பட்டிருக்கின்றது. எனவே ரங்கா தலைமையிலான புதிய கால்பந்து சம்மேளனம் தங்களது பொறுப்புக்களை முன்னெடுக்க முடியும் எனக் கூறப்படுகின்றது.

ஆனால் மிகப்பெரிய ஓர் அதிர்ச்சியாக இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்குள் அரசியல் மற்றும் மூன்றாம் நபர்களின் தலையீடு இருப்பதனைக் கருத்திற் கொண்டு கடந்த 23 ஆம் திகதி சர்வதேச கால்பந்து சம்மேளனம் (FIFA) தடை உத்தரவைப் பிறப்பித்தது.

அண்மைய கால நிர்வாகச் சீர்கேடுகள் காரணமாக இந்தத்தடை எதிர்பார்க்கப்பட்டபோதிலும் புதிய நிர்வாகம் பொறுப்பேற்க நீதிமன்றம் தடையை விலக்கிய பின்னரே இந்த அறிவிப்பை சர்வதேசக் கால்பந்து சம்மேளனம் விதித்தமையானது இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சருக்கும் விழுந்த அடியாகவே கருதவேண்டியிருக்கிறது.

இந்தத்தடை அமுலில் இருக்கும் காலப்பகுதியில் இலங்கை கால்பந்து சம்மேளன பிரதிநிதிகளாலோ அல்லது கழக அணிகள் மூலமாகவோ சர்வதேசத் தொடர்களில் பங்கெடுக்க முடியாது. அத்தோடு, தடை அமுலில் உள்ள சந்தர்ப்பத்தில் இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கோ அல்லது அதன் உத்தியோகபூர்வ அதிகாரிகளுக்கோ சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனம் அல்லது ஆசிய கால்பந்தாட்ட சம்மேளனம் (AFC) மூலம் கிடைக்கின்ற அனைத்து வகையான வெகுமதிகளும் நீக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் கவனிக்கவேண்டும்.

சர்வதேச கால்பந்து சம்மேளனம் (FIFA) மற்றும் ஆசிய கால்பந்து கூட்டமைப்பு என்பன 2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இலங்கைத் தரப்பினருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர் மேற்கொண்ட புதிய சட்ட விதிமுறைகளுக்கு அமைய இலங்கை கால்பந்து சம்மேளனம் செயற்படவில்லை என்ற காரணத்தினாலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக FIFA குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் FIFA வின் பொதுச் செயலாளர் பத்மா சமூரா, இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு கடிதம் மூலம் குறிப்பிட்டுள்ள இந்தத் தடையை நீக்குவதற்கான நிபந்தனைகளாவன-

(19ஆம் பக்கம் பார்க்க)

# மலையகம்-200



குமாரவேலு கணேசன்

இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்ந்துவந்த இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் குடியேற்றப்பட்டு இவ்வாண்டுடன் 200 வருடங்கள் நிறைவு பெறுகின்ற போதிலும் அவர்களின் வாழ்வியல் இன்றும் மிக மோசமான நிலையிலேயே காணப்படுகின்றது.

## 19 ஆம் நூற்றாண்டில் இந்தியக் குடிப் பெயர்வு

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், பல்வேறு காரணங்களுக்காக இந்தியாவில் இருந்து குறிப்பிடத்தக்க அளவில் மக்கள் இடம் பெயர்ந்தனர். உலகின் பிற பகுதிகளில், குறிப்பாக இலங்கை, தென்னாபிரிக்கா, பிஜி, கயானா, ட்ரினிடாட் மற்றும் மொரீஷியஸ் போன்ற பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளில் நிலவிய பொருளாதார வாய்ப்பு இவ்விடப்பெயர்வின் முக்கியமான காரணிகளில் ஒன்றாகும். இந்தக் குடியேற்ற நாடுகளுக்கு தொழிலாளர் தேவை இருந்ததால், மேலும் பல இந்தியர்கள் இந்த இடங்களில் கிடைக்கும் பொருளாதார வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள தங்கள் வீடுகளை விட்டு வெளியேறத் தயாராக இருந்த போது வேறும் பல அக, புறக்காரணிகள் அவர்களின் வெளியேற்றத்திற்கு ஊக்கியாக மாறின.

இந்திய அரசியல் சூழ்நிலையும் இடம் பெயர்வதற்கான மற்றொரு முக்கியமான காரணமாகும். அக்காலகட்டத்தில் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் இந்திய மக்கள் மீது கடுமையான சட்டங்களையும் ஒடுக்கு முறைகளையும் அப்போது விதித்துக்கொண்டிருந்தது. பரவலான வறுமையும் ஒடுக்குமுறைக்கு வழிவகுத்தது.

உதாரணமாக இந்தியாவில் இருந்து பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பட்டு, வாசனைத்திரவியங்கள் போன்ற பொருட்களுக்கு ஆரம்பத்தில் அதிக வரி விதிக்கப்பட்டு பின்பு முற்றாகத் தடை செய்யப்பட்டது. வேறும் பல உள்நாட்டு உற்பத்திகளுக்கு உயர் வரி விதிக்கப்பட்டது. பிரித்தானியாவில் இருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 2-3 % வரியும், இந்தியாவில் இருந்து பிரித்தானியாவுக்கு ஏற்றுமதியாகும் பொருட்களுக்கு 20-30% வரியும் விதிக்கப்பட்டது. இவ்வாறான செயற்பாடுகள் சுதேச உற்பத்திகள் முற்றாக முடங்கிப் போகவும் வறுமை தலைவிரித்தாடவும் வழிவகுத்தது. ஆங்கிலேய அதிகாரிகளால் விதிக்கப்பட்ட கொடுமையான நிலவரி முறை இன்னொரு உதாரணமாகும். சென்னை மாகாணத்தில் விளை பொருட்களின் அரைப்பங்கு வரியாக அறவிடப்பட்டது.

இப்படியான திட்டமிட்ட ஒடுக்கு முறையால் 1799 - 1834 ஆண்டு காலகட்டத்தில் 40 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இந்தியாவின் தென் மாகாணங்களில் பஞ்சத்தால் இறந்து போயினர். பல இந்தியர்கள் இந்த நிலைமைகளில் இருந்து தப்பிக்க உலகின் பிற பகுதிகளுக்கு குடிபெயர்ந்து அதிக சுதந்திரத்துடனும் கண்ணியத்துடனும் வாழ முயன்றனர். இவற்றுக்கப்பால், இந்தியாவில் உள்ள சாதி அமைப்பும் மக்கள் இடம்பெயர்வதில் பெரும் பங்கைக் கொண்டிருந்தது. தாழ்த்தப்பட்ட சாதியினர் பெரும்பாலும் இரண்டாம் தர குடிமக்களாகக் கருதப்பட்டதுடன் அவர்கள் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் பாகுபாடுகளை எதிர்கொண்டதனால் அவர்கள் வேறு இடங்களில் சிறந்த வாய்ப்புகளைத் தேட முற்பட்டனர்.

ஒட்டு மொத்தமாக, 19 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து மக்கள் இடம்பெயர்வது என்பது பொருளாதார, அரசியல் மற்றும் சமூகக் காரணிகளின் கலவையால் உந்தப்பட்ட ஒரு சிக்கலான நிகழ்வாகும். இந்த இடம்பெயர்வு இந்தியாவை விட்டு வெளியேறியவர்கள் மற்றும் அவர்கள் விட்டுச் சென்ற சமூகங்கள் மீது நேர்மறையான மற்றும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தின.

## மலையகத் தொழிலாளர்களின் இலங்கை வருகை

ஆங்கிலேய ஆளுநராக பிரெட்றிக் நோர்த் கடமையாற்றிய 1798 - 1815 காலப்பகுதியிலேயே இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்கு கொண்டு வரப்படத் தொடங்கிவிட்டனர். இவர்கள் பெரும்பாலும் வீதிகள், பாலங்கள் அமைப்பதற்காக ஒப்பந்தகாரர்களால் கொண்டுவரப்பட்டனர். இவர்கள் இந்தியாவில் இருந்து படகுகள் மூலம் தலைமன்னாருக்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து மூன்று மாதகால நடைப் பயணங்களின் பின்னர் தேவையான இடங்களுக்குச் சென்றனர்.

இலங்கையில் கோப்பிப் பயிச்செய்கை ஆங்கிலேயர்களால் ஆரம்பிக்கப்பட்டபோது பெருந்தோட்டத் தொழிலுக்காக தொழிலாளர்கள் இந்தியாவில் இருந்து 1823 இல் முதன் முறையாகக் கொண்டுவரப்பட்டனர். இவர்கள் இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள், கொடிய விசப்பாம்புகள், மனிதரைக் கொல்லும் சிறுத்தைகள், உயிர்க்கொல்லி மலைக்குளவிகள் நிறைந்த மலையகக் காடுகளுக்குள் குடியேற்றப்பட்டு இவ் வருடத்துடன் இரண்டு நூற்றாண்டுகள் நிறைவு பெறுகின்றன.

1830 ஆம் ஆண்டளவில் பிரித்தானியா நிறைவேற்றிய அடிமைகள் தடைச் சட்டத்தின் பின்பாக பெருமளவான தொழிலாளிகள் இந்தியாவில் இருந்து கோப்பித் தோட்டங்களுக்காக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டனர். 1839- 1859 ஆண்டுக்கு இடைப்பட்ட 20 வருட காலத்தில் மாத்திரம் 9 இலட்சம் இந்தியத் தொழிலாளர்கள் கோப்பிப் பயிர்ச் செய்கைக்காக கொண்டு வரப்பட்டனர் என்றும் பின்பு அதில் அரைப் பங்கினர் இந்தியாவுக்குத் திரும்பி விட்டனர் என்றும் குறிப்புக்கள் கூறுகின்றன. 1865 ஆம் ஆண்டளவில் 75% ஆன தொழிலாளர்கள் ஆண்களாகவும் 18% ஆன தொழிலாளர்கள் பெண்களாகவும் 7% சிறுவர்களாகவும் இருந்துள்ளனர். பிற்காலப் பகுதியிலேயே பெருமளவில் பெண்களும் தொழிலாளர்களாகவும், திருமண பந்தங்கள் மூலமாகவும் இலங்கையின் மலையகப்பகுதிக்கு கொண்டு வரப்பட்டனர் என்று தெரியவருகின்றது.

இந்தியாவில் இருந்து இலங்கையில் வந்து குடியேறியோரை பெருந்தோட்டம் சார்ந்த இந்தியத்தமிழர், பெருந்தோட்டம் சாராத இந்தியத்தமிழர் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கைக்கு வியாபார நோக்கமாக வந்த நாட்டுக்கோட்டைச் செட்டிமார், மற்றும் அவர்களுக்கு உதவியாக வந்தவர்கள் இந்தப் பெருந்தோட்டம் சாராத இந்தியத் தமிழர்களுக்கு உதாரணமாகும். பெருந்தோட்டம் சார்ந்த இந்தியத்தமிழர்களில் பெரும்பான்மையோர் திருச்சி, சேலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் இருந்தும், பெருந்தோட்டம் சாராத இந்தியத்தமிழர்கள் பெரும்பாலும் திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இருந்தும் வந்ததாக குறிப்புக்கள் மேலும் சொல்கின்றன. எந்தப்பிரதேசங்களில் இருந்து எத்தனை வீதமானோர் இலங்கைக்கு வந்தனர் என்ற முழுமையான விபரம் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| பெருந்தோட்டம் சார்ந்த இந்திய தமிழர் | | பெருந்தோட்டம் சாராத இந்திய தமிழர் | |
|---|---|---|---|
| தமிழகமாவட்டம் | % | தமிழகமாவட்டம் | % |
| திருச்சிராப்பள்ளி | 35 | திருநெல்வேலி | 40 |
| சேலம் | 18 | ராமநாதபுரம் | 15 |
| தஞ்சாவூர் | 10 | மலபார் | 8 |
| மதுரை | 8 | தஞ்சாவூர் | 8 |
| இராமநாதபுரம் | 7 | மதுரை | 6 |
| பட்டுக்கோட்டை | 7 | திருவெண்கூர் | 5 |
| தென் ஆர்காடு | 6 | சென்னை | 4 |
| வட ஆர்காடு | 5 | திருச்சிராப்பள்ளி | 4 |
| செங்கல்பட்டு | 3 | கொச்சின் | 4 |
| திருநெல்வேலி | 3 | பட்டுக்கோட்டை | 1 |
| கோயம்புத்தூர் | 2 | ஆர்காடு | 1 |
| மற்றவை | 2 | மற்றமாவட்டங்கள் | 3 |

(அட்டவணை1. 19ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு கொண்டு செல்லப்பட்ட இந்திய தொழிலாளர்களின் சொந்த மாவட்டங்கள். (ஏ.நித்தியானந்தன்)

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் Rust decease என்னும் பங்கசு நோய்த் தாக்கத்தால் கோப்பிப் பயிர்ச்செய்கை பெரிதும் பாதிக்கப்பட, தேயிலைப் பயிர்ச் செய்கை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை உலகின் முதல்தர தேயிலையாக வெற்றி நடை போடுகின்றது.

பிரித்தானியர்களின் ஆட்சிக்காலத்தில் பல அமைப்புகளின் முயற்சியினால் இந்தப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பல சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தன.

இந்த மக்களின் உரிமைகளுக்காக போராடியவர்களில் கோதண்டராம நடேசய்யர் (1887-1947) முக்கியமானவர். இவர் வியாபார நோக்கமாக இலங்கை வந்திருந்தபோது மலையக மக்களின் துன்பங்களை அறிந்து அங்கேயே தங்கியிருந்து அவர்களின் உரிமைகளுக்காக அயராது பாடுபட்ட ஒருவராவார்.

ஆனால் இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னான காலப்பகுதியில், முக்கியமாக பெருந்தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்டதன் பின்பாக தொழிலாளர்கள் வாழ்வில் பூகம்பம் வீசதொடங்கியது.



(படம்1 : தேயிலைக் கொழுந்து பறிக்கும் மலையகப் பெண்)

## இலங்கையின் சுதந்திரத்தின் பின்னான மலையகத் தமிழர்களின் வாழ்க்கை

இலங்கை சுதந்திரமடைந்த சில மாதங்களிலேயே 1948 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தின் காரணமாக இலங்கயின் சனத்தொகையின் 15% ஆகவிருந்த இந்திய வம்சாவளி தமிழர்களில் 7 இலட்சம் பேர் நாடற்றவர் ஆக்கப்பட்டனர். இதன் காரணமாக அவர்களின் சனத்தொகை 4மூ ஆக குறைக்கப்பட்டது. 1964 ஆம் ஆண்டு செய்யப்பட்ட சிறிமா- சாஸ்திரி உடன்படிக்கையின் பிரகாரம் நாடற்றவராக இருந்தவர்களில் 525,000 பேரை இந்தியா தொகுதி தொகுதியாக அடுத்த 15 ஆண்டுகளின் எடுத்துக்கொண்டது. இவர்கள் தலைமன்னார் ஊடாக கப்பலில் ராமேஸ்வரம் கொண்டு செல்லப்பட்டு மண்டபம் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டு பின்பு தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் குடியேற்றப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் மதுரையை அண்டிய பிரதேசங்களில் குடியேற்றப்பட்டனர் என்றும், ஆனால் அவர்களும் அங்குள்ளவர்களால் விரும்பப்படாமல் மிகவும் கடின வாழ்க்கையையே வாழ்கின்றனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. பலர் மூணாறு போன்ற இடங்களில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் சென்று தமக்குத் தெரிந்த வேலையைச் செய்கின்றனர்.

## ஈழப்போருக்குப் பின்னான மலையகத் தமிழர்களின் வாழ்வியல்

இறுதி ஈழப்போருக்குப் பிந்திய காலகட்டத்தில் இலங்கையில் தேசியவாத உணர்வுகள் அதிகரித்துள்ளதுடன், மலையகத் தமிழர்கள் உட்பட சிறுபான்மையினரின் பாகுபாடும் அவர்கள் ஒடுக்கப்படுவதும் அதிகரித்து வருகின்றது. இந்த சவால்கள் இருந்தபோதிலும், இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழர்கள் நாட்டின் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் தொடர்ந்து முக்கியமான பங்காற்றி வருகின்றனர். அவர்கள் நாட்டின் தேயிலை மற்றும் இறப்பர் கைத்தொழில்களுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பைத் தொடர்ந்து வழங்கி வருவதுடன் கல்வி, அரசியல் மற்றும் கலை போன்ற துறைகளிலும் பெரும் பங்களிப்பு செய்து வருகின்றனர்.

சமீப ஆண்டுகளில், இலங்கையில் மலையகத் தமிழர்களின் நிலைமை மிகவும் சிக்கலானதாகவும் கடினமாகவும் மாறியுள்ளது. 1958, 1977, 1983 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இனக்கலவரங்களில் பெரிதும் பாதிக்கப்பட்ட மலையகத்தமிழர்கள் 2009 இல் முடிவடைந்த உள்நாட்டுப் போராலும் மிகவும் பாதிகப்பட்டனர். பல இந்தியத் தமிழர்கள் விடுதலைப் போராட்ட இயக்கங்களில் இணைந்து போராடி வீரமரணமடைந்தனர். பல குடும்பங்கள் வட மாகாணத்தில், வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் குடியேறின.

2012ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சனத்தொகை மதிப்பீட்டின்படி மத்திய, சப்பிரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் 1 மில்லியனுக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் இந்திய வம்சாவழி மலையக மக்களே. அவர்களும் தம்மை இலங்கைத்தமிழர் என்று குடிசன மதிப்பீட்டுப் பத்திரத்தில் பதிவதால் உத்தியோக பூர்வமாக அவர்களின் தொகை இனிமேற் காலங்களில் பிரித்தறியப்பட முடியாமல் போகலாம்.


தங்களின் பூர்வீகத்தை தெளிவாகப் புரிந்துக்கொள்ளாமல் அல்லது குடிசன மதிப்பீட்டு அலுவலகர்களின் போதிய பயிற்சியின்மையால் இலங்கைத் தமிழர்களாக இவர்கள் தம்மைப் பதிவு செய்து கொள்கின்றார்கள். குடிசன மதிப்பீட்டு சட்டவிதிமுறைகளின்படி தொடர்ந்து அடுத்து வரும் 5 குடிசன மதிப்பீட்டு கணக்கெடுப்பில் 5% க்கும் குறைவாக இருக்கும் இனம் குடிசனப் பதிவேட்டில் இருந்து நீக்கப்படும் ஆபத்து இருப்பதாக சொல்லப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டு குடித்தொகை மதிப்பீட்டின்படி மத்திய, சப்பிரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் மாத்திரம் வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் குடித்தொகை வடமாகாணத்தின் சனத் தொகையிலும் பார்க்க அதிகமானது என்ற புள்ளிவிபரம் பலரையும் ஆச்சரியமூட்டலாம்.

200 வருடம் கழிந்தும் இன்றும் பல மலையக மக்கள் லயன்கள் என்றழைக்கப்படும் லைன் ஹவுஸ் (Line House) களில் வாழ்ந்து வருவது எவ்வகையில் நியாயமாகும்?

இவர்களின் வரலாற்றைப் பற்றி பெரியளவில் தெரிந்திராத தமிழ் மக்கள் இன்னமும் எம்மத்தியில் இருக்கின்றனர் என்பது உங்கள் பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். 14 கிலோமீற்றர் நடந்து பாடசாலைக்கு சென்று கல்வி கற்று மீண்டும் 14 கிலோமீற்றர் நடந்து திரும்பி வரும் மாணவர்கள் இன்றும் மலையகக் கிராமங்களில் உள்ளனர் என்றால் நம்புவீர்களா?

நேரடியாக இந்தப்பிரதேசங்களுக்கு சென்று இந்த மக்களின் துயரங்களைப் பார்க்க, உதவ முடியாதவர்கள் பாலாவின் பரதேசி திரைப்படம் பார்த்தீர்கள் என்றால் இம்மக்களின் வாழ்வியலையும் துயரங்களையும் ஓரளவுக்கு புரிந்து கொள்ளலாம்.



(படம்2: தமிழில் லயன் வீடுகள் என்று அழைக்கப்படும் மலையகத் தோட்டத்தொழிலாளர்களின் வீடுகள்)

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:06 அதிர்வு: 68 மாசி 2023 தொ.பே:1800 960 162

# உரிமைகளை அடகுவைக்காதீர்!

சற்றுத் தொலைவில் இருக்கும் தங்கத்தை கைப்பற்றுவதற்கு முற்படாமல், உக்கிபோய் காலடியில் கிடக்கும் தகரத்துக்காக அடித்துக்கொள்வதும், பங்காளிகளைப் பகைத்துக்கொள்வதும் அறியாமையின் – இயலாமையின் உச்சகட்டமாகும். இதற்கு நிகரான வகையிலான 'அரசியல் சம்பவங்களே' தாயகத்தில்– தமிழ்த் தேசிய அரசியலில்– தற்போது அரங்கேறிவருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர், 'ஒற்றுமை' என்பதே தமிழர்களுக்கு எஞ்சியுள்ள ஒரேயொரு பலமும், ஆயுதமுமாகும். அந்த ஆயுதத்தை தக்க வகையில் பயன்படுத்தி – எதிரிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள தடைகளைத் தகர்த்தெறிந்து இலக்கை நோக்கி நகர்வதை விடுத்து, கொள்கையை மறந்து – விடுதலை வேட்கையைத் துறந்து – வெவ்வேறான திசைகளில் பிரிந்து நின்று கோமாளிக் கூத்துகளை அரங்கேற்றுவது, தமிழ் இனத்துக்குதான் சாபக்கேடாக அமையப்போகின்றது என்பதே கசப்பான உண்மையாகும்.

குறிப்பாக தமிழ்க் கட்சிகளைக் கூறுபோட்டு, தமிழ்த் தேசியத்தைச் சிதைப்பதற்காக சிங்கள தேசம் வைத்துள்ள 'சூழ்ச்சிப்' பொறிக்குள், கண்ணை விழித்தபடியே – அதுவும் பட்டப்பகலில் – தமிழ்க் கட்சிகள் சிக்கிவருவது 'சுயநல அரசியலால்' ஏற்பட்ட விபரீதம் என்பதை அந்தக்கட்சிகள் உணராவிட்டால் – திருந்தாவிட்டால் –தமிழர்களைக் கடவுளால்கூட காப்பாற்ற முடியாமல் போகக்கூடும்.

தமிழ்மக்களுக்கு அரசியல்தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கான ஒரு ஆரம்பப் புள்ளியாகவே மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது. எனினும், அதிகாரப்பகிர்வு என்பது முழுமையாக இடம்பெறவில்லை. அதனைச் செய்வதற்கு சிங்கள தேசமும் முன்வரவில்லை.மாகாண சபைகள் கலைக்கப்பட்டு நீண்டகாலமாகியும், அதற்கான தேர்தலை நடத்துவதிலும், புதிய ஆட்சியை அந்தந்த மாகாணசபைகளில் ஏற்படுத்துவதிலும் இலங்கை அரசாங்கம் விட்டேத்தித்தனமாகவே செயற்படுகின்றது. ஆனால் உள்ளூராட்சி சபைகள் விடயத்தில் இதற்கு மாறாகவே இலங்கை அரசு நடந்துகொள்கின்றது. அவற்றின் ஆட்சிக் காலத்தை இருமுறை நீட்டித்த அரசாங்கம், இப்போது அந்த சபைகளுக்கான தேர்தலை நடத்தவும் அனுமதிகொடுத்துள்ளது. இதன்மூலம் மாகாணசபையை மாற்றாந்தாய் மனப்பான்மையோடும், உள்ளூராட்சி சபைகளை சொந்தப்பிள்ளை போலவும் நோக்கும் இலங்கை அரசாங்கத்தின் இரட்டைவேடம் நன்கு புலப்படுகின்றது. ஒருவேளை, உள்ளூராட்சிசபைகளைப் பலப்படுத்தி, அதனைத்தான் இனப்பிரச்சினைக்கான தீர்வாக முன்வைக்க சிங்களப் பேரினவாதிகள் எண்ணுகின்றனர் போலும். மாகாணசபைகளுக்கே முறையான அதிகாரங்கள் இல்லாத போது, உள்ளாட்சிசபைகளுக்கு எப்படி அதிகாரங்கள் பகிரப்படும்? அதன்மூலம் தமிழர்களின் பிரதான இலக்கை நோக்கி எப்படி நகர முடியும்?

இந்தத் தருணத்தில் ஒன்றுபட்டுக் குரலெழுப்பவேண்டிய தமிழ்க் கட்சிகளோ, பொது எதிரியை மறந்துவிட்டு, தேர்தலுக்காக தமக்கிடையே பிளவுற்று மாறி மாறி சேற்றை வாரி வீசிக்கொண்டிருக்கின்றன. தேர்தலென்பது மக்களின் ஜனநாயக உரிமை. இறைமையுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். ஆக உள்ளாட்சிசபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கட்சிகள் போட்டியிடுவதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் போட்டியிடும் விதமும், வாக்கு வேட்டைக்காக அசிங்கமான முறையில் மோதிக்கொள்வதும்தான் கழுவாத 'கக்கூஸ்' போல் நாறிவருகின்றது. இதனையே நாம் விமர்சிக்கின்றோம். தமிழ் தேசியம் தடம்புரளக்கூடாது என வலியுறுத்துகின்றோம். தம்மைத் தாக்குவதற்கான பொல்லை தாமே பேரினவாத சக்திகளிடம் வழங்கிவிடக்கூடாது என இடித்துரைத்துவருகின்றோம்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டியது தனது பொறுப்பு என இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிப்படையாக அறிவித்துள்ளார். இது விடயத்தில் டில்லியும் உறுதியாக நிற்கின்றது. இந்நிலையில் கைவசம் இருக்கும் 13 ஐ முழுமையாகப் பெற்றுவிட்டு, அதன் பிறகு அடுத்தக்கட்டம் நோக்கி நகர்வதே தற்போதைய சூழ்நிலையில் ஏற்புடைய நடவடிக்கையாகும். அதைவிடுத்து 'கோவணம்' வேண்டாம், 'கோட்சூட்'தான் வேண்டுமென அடம் பிடித்தால் யாருக்கு இழப்பு? எனவே, பூகோள அரசியலின் தன்மை, தெற்கில் ஏற்பட்டுள்ள மாற்றம் உள்ளிட்ட விடயங்களை உணர்ந்து, தமிழர் தாயக மக்களின் ஒருமித்த கருத்தை வெளிப்படுத்தும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக இந்தத் தேர்தலை தமிழ்த் தேசியக் கட்சிகள் பயன்படுத்தி இருக்க வேண்டும்.

அவ்வாறு செய்யாமல் சபைகளில் கதிரைகளை பிடிப்பதற்காக பிளவுபட்டு நின்று, பிரசாரங்களை செய்வது, தமிழர்கள் மத்தியில் தமிழ் தேசியக் கட்சிகளுக்கு இருக்கும் சொற்பஅளவு நம்பிக்கையையும் சிதைக்கும் செயலாகும். அரசியல் செய்யுங்கள். அதற்காக தமிழர் தாயகத்தை அசிங்கப்படுத்த வேண்டாம். எமது உரிமைகளை அடகு வைத்துவிடவும் வேண்டாம்.

# பொய்மான்: ஈழசினிமாவின் புது அடையாளம்

ஆ

பொதுவாக மருத்துவர்களின் உலகம், நோயாளிகள், மாத்திரைகள், ஊசிகள், சத்திரசிகிச்சைகள் என்று குறிப்பிட்ட சில விடயங்களுக்குள்ளேயே மட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றன. ஆனால் ஒரு சில மருத்துவர்களே விதிவிலக்காக , கலைகளின் பக்கமும் தங்கள் கண்ணைத் திறக்கின்றனர். அவ்வகையில் இப்போது சில மருத்துவர்கள் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் சினிமாவின் பக்கமாகச் செயற்படத்தொடங்கியிருக்கிறார்கள்.

இறுதிப்போர் அவலங்களைச் சொல்லும் 'பொய்யா விளக்கு' படத்தை அந்த அவலத்துக்குள் வாழ்ந்து தப்பிப் பிழைத்த மருத்துவர் வரதராஜா தயாரித்து, இயக்கியிருந்தார். அதேபோல யாழ்ப்பாணத்தில் பிரபல இருதய நிபுணர் மருத்துவக் கலாநிதி சிவன் சுதன் 'தூவானம்' என்ற படத்தை ரதீதரனின் இயக்கத்தில் தயாரித்துள்ளார். அந்தவகையில் 'பொய்மான்' என்ற திரைப்படம் வழியாக சினிமாவுக்குள் காலடி எடுத்துவைத்துள்ள மூன்றாவது ஈழத்து மருத்துவர் தான் மருத்துவர் ஜெயமோகன். புற்றுநோய் நிபுணராகப் பணிபுரியும் மருத்துவர் ஜெயமோகன் இயக்கத்தில், ஜனர்த்தனன், கவியா, ஜெயமோகன், சாமினி ஆகியோர் நடித்துள்ள பொய்மான் திரைப்படம் அண்மையில் சிட்னி மற்றும் மெல்பேர்னில் பிரமாண்டமான திரையிடலுடன் வெளியிடப்பட்டது.




இந்தியத் திரைப்பட நிழலுக்குள் மயங்கி சிதறிப்போய்க் கிடக்கும் ஈழத்திரைப்பட இயக்குநர்களுக்கு மத்தியில் , ஜெயமோகன் தனித்துவமாகத் தன் முத்திரையை பொய்மானில் பதித்துள்ளார். படத்தின் கதைக்களத்தை ஆஸ்திரேலியா வாழ் இலங்கையராகவும், ஈழத்து தமிழராகவும் இருவேறு தளங்கள் ஊடாக அணுகியிருப்பது சிறப்பு. தமிழர்கள் புலம்பெயர்ந்திருந்தாலும் அவர்களுக்குள் காணப்படும் வர்க்க ரீதியிலான பிரச்சினைகளை நகைச்சுவையோடு புடம் போட்டு வைத்துள்ளமை சமூகத்தின் மீதான இயக்குநரின் பார்வையைத் தெளிவாகக் காட்டுகின்றது.

புலம்பெயர் நாட்டில் நடக்கும் ஒரு நிதர்சனத்தை படம் போட்டு காட்டியுள்ளார் இயக்குநர். பணத்துக்கு பின்னால் அலையும் எமது முதலாம் புலம்பெயர் சமூகம் வாழ்க்கையை வாழத் தவறுவதையும், அடுத்த தலைமுறையின் சுயத்தில் மண் அள்ளி போடுவதையும் இயக்குநர் தனது பாணியில் சொல்லி இருக்கிறார். வாழ்வியலில் எங்கு நினைவுகள் பதியப்படுகின்றன என்பதையும் சற்று அழுத்தியே இயக்குநர் கூறி இருக்கிறரர். சிவன் அருள் இல்லத்தில் குழந்தைகள் துள்ளி விளையாடும் காட்சி கண்ணில் கண்ணீரை வரவழைக்கின்றது. கப்பல் காட்சி கடலைக் கடப்பதில் உள்ள சோகத்தை கண் முன் நிறுத்துகிறது. புலம்பெயர் தேசங்களில் வெறும் பதவிக்கும், பணத்துக்கும் பின்னால் ஓடும் எம்மவர்கள் இந்தப் படத்தைப் பார்த்த பின்னராவது கொஞ்சம் சிந்திப்பார்கள் என நம்பலாம்.

கதைக்கேற்ற பாடல் , கதைக்கேற்ற காட்சிப்படுத்தல் , சரியான நடிகர் தேர்வு, தொய்வில்லாத திரைக்கதை என இயகுநராக மருத்துவர் ஜெயமோகன் தன் பணியை மிகச் சரியாகவே செய்து முடித்திருக்கிறார். உருவக் கேலியோ, ஆபாச இரட்டை அர்த்தங்களோ இல்லாமல் தரமான நகைச்சுவை படமெங்கும் இழையோடுகிறது.

ஆஸ்திரேலியாவிலும் சரி , ஈழத்திலும் காட்சியமைப்புகளுக்கு ஒளிப்பதிவு செய்த விதம் மற்றும் படத்தொகுப்பு என அனைத்தும் ஈழத்திரைப்பட வரலாற்றில் ஒரு மைல்கல் எனக்கொள்ளலாம்.

இந்தியத் திரைப்பட மோகத்துக்குள் சிக்குண்டிருக்கும் நம்மவர்களுக்கு பொய்மான் ஈழசினிமாவின் எழுச்சியை அழுத்தமாக எடுத்துரைத்துள்ளது.

## வாசகர் களம்

எரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துக்கள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

**ஆசிரியர்பீடம், எதிரொலி**



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI



# இரும்புக் கரம், இளகிய இதயம், செயலின் செல்வர்

## –ஜெசிந்தா அர்டென்



ஆனந்தன் வசந்த
கிருஷ்ணமூர்த்தி

> **“சரியான வழி எப்போதும் பிரபலமானதாகவோ அல்லது எளிதாகவோ இருக்கமுடியாது. யாருடைய ஆதரவும் கிடைக்காது எனினும் நேர்மை வழியில் நிற்பதே தார்மீக குணத்தின் பண்பாகும்”**
>
> **- மார்கெரெட் சேஸ் ஸ்மித்**

வரலாற்றில் நாம் எத்தனையோ இரும்புக்கரம் கொண்ட அதிபர்களைப் பார்த்திருக்கிறோம். அவர்கள் அனைவரும் பதவிக்கு வந்த உடனே இதயத்தை (வட்டிக்கடையில் அடகு வைத்தது போல) எங்கோ எறிந்துவிட்டு பெருமுதலாளிகளுக்கும், கார்ப்ரேட் நிறுவனங்களுக்கும் அங்கீகரிக்கப்படாத விளம்பர ஆலோசகராக பணியாற்றியிருப்பதையே இதுகாறும் நாம் அறிந்ததுண்டு. கருணையின் உருவமாக நாம் கருதும் பெண்ணினத்தை சேர்ந்த அதிபர்கள் ஒன்றும் இதற்கு விதிவிலக்கல்ல. மார்கரெட் தாட்சர் ,இந்திரா காந்தி போன்ற பல பெண் அதிபர்களை இந்த வரிசையிலேயே வைக்க முடியும். இரும்புக்கரமும் ,இளகிய இதயமும், தார்மீக குணமும் ,கள்ளமில்லாச் சிரிப்பும் கொண்ட பெண் தலைவரின் பெயரைச் சொல்லுங்கள் என்றால் உடனடியாக நம் எல்லோர் நினைவிற்கும் வருவது ‘ஜெசிந்தா அர்டென்’

“முரண்பாடுகள் உங்கள் குணாதிசயத்தைத் தீர்மானிக்கும். நெருக்கடிகள் அதனை வரையறுக்கும்” என்று தலைமைப் பண்பை பற்றி வல்லுநர்கள் குறிப்பிடுவார்கள். ஜெசிந்தா ஒரு நல்ல தலைவர் என்பதும் உலகத்தின் பல தலைவர்களால் கையாளமுடியாத நெருக்கடி நிலைகளை எவ்வாறு சமாளித்து வந்தார் என்பதும் நாம் அனைவரும் நன்கு அறிந்ததே.

“அவர்கள் நம்மவர்கள்”

- 2019 மார்ச் 15ஆம் திகதி அன்று நடந்த கிரிஸ்ட்சேர்ச் பகுதியில் உள்ள பள்ளிவாசல்களில் மதவெறி கொண்ட பாரதூரமான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்கு பிறகு ,பத்திரிகையாளர் சந்திப்பில் ஜெசிந்தா கூறிய இந்த சொற்றொடரை நாம் எல்லோரும் அவ்வளவு எளிதில் மறந்திருக்க முடியாது. ஆள் பாதி ,ஆடை பாதி என்பார்கள் . பாதிக்கப்பட்ட இஸ்லாமிய மக்களைச் சந்திக்க சென்றபொழுது அவர் அவர்களில் ஒருவர் போலவே உடையணிந்திருந்தார் . இந்தச் சம்பவத்துக்குப் பிறகு ஜெசிந்தா சமூக ஊடகங்களின் தலைவர்களுடன் ( Facebook, YouTube , ட்விட்டர் மற்றும் பல ) உரையாடி மத ,இன வெறுப்பு, கீழ்மைத்தர ,பொய் ,கயமைச் செய்திகளைப் பரவாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுத்த உலகின் முதல் தலைவரானார். அது மட்டுமல்ல உலகில் முதல் முறையாக வெகு கடுமையான ஆயுதக்கட்டுப்பாட்டுச் சட்டத்தை கொண்டு வந்ததும் அவரே.

2020-2022 கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் உலகின் மாபெரும் தலைவர்களெல்லாம் அதனை எப்படி கையாளுவதென்று வழி தெரியாமல் நின்றபோது, ஜெசிந்தா அனைவருக்கும் முன்னோடியாக ,நோய்க்கால அவசர மேலாண்மை நடவடிக்கைகளை கொண்டுவந்து நியூஸிலாந்து போன்ற சிறிய தீவு நாட்டை அழிவிலிருந்து காப்பாற்றியதை எப்படி நம்மால் அவ்வளவு எளிதில் மறக்க முடியும்? அதன்பிறகு நியூஸிலாந்தின் இரும்புக்கோட்டை என்று அவர் செல்லமாக உலகமெங்கும் அழைக்கப்பட்டார். அவரது ஒவ்வொரு கோவிட் சிறப்புக் கூட்டமும் ,அதைத் தொடர்ந்த மிகக் கடுமையான கட்டுப்பாடுகளும் ,அதே வேளையில் சாதாரண பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருக்க நிறைவேற்றிய நலத்திட்டங்களும் அவரை மக்களின் தலைவர் என்று நமக்கு காட்டின. அடுத்த தலைமுறை புகைபிடித்தல் பழக்கத்துக்கு அடிமையாகக் கூடாது என்பதற்காக ,உலகத்திலேயே முதல்முறையாக ஜனவரி 1, 2009 க்கு பிறகு பிறந்தவர்களுக்கு புகைப் பொருள்கள் ( சிகரெட் மற்றும் இன்னபிற புகைப்பொருள்கள் ) விற்கக் கூடாதென தொலைநோக்குச் சட்டம் கொண்டுவந்தவர்.மூளை இருக்கும் இடத்தில் இதயம் இருப்போரே ,வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் இவ்வாறு மனம் வாட முடியும்.

ஜனங்களின் தலைவர் என்பவருக்கு தேவையான கருணை, ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் அரவணைத்தல் போன்ற குணாதிசயங்களின் மொத்த உரு ஜெசிந்தா அர்டென். நியூஸிலாந்துக்காரரான ஜூராசிக் பார்க் திரைப்பட புகழ் சாம் நெய்ல் செல்லும் நாடுகளில் எல்லாம் அந்த நாட்டு மக்கள், “ஜெசிந்தாவை கொஞ்சக்காலம் எங்களுக்கு கடனாக தர முடியுமா? எங்கள் தலைவர்களுக்கு மக்கள் என்று பலர் இருக்கிறார்கள் என்றே தெரியவில்லை” என்று அவரிடம் கேட்டதாக எழுதுகிறார். அதைப் படித்த போது,ஜெசிந்தாவின் மாண்பை அறிந்து கொள்ளமுடியும் . ஆஸ்திரேலிய அரசாங்கத்தால் குடியுரிமை நிராகரிக்கப்பட்ட 150 அகதிகளை மீள்குடியேற்றம் செய்ய ஜெசிந்தாவின் மனிதாபிமான நியூசிலாந்து அரசாங்கம் நீண்ட காலமாக முயற்சி எடுத்ததையும் ,அதன் பலனாக கடந்த வருடம் 450 அகதிகள் மறுவாழ்வு பெற்று நியூஸிலாந்து புலம்பெயர்ந்ததும் அவரின் தனிப்பட்ட சாதனையே .

“இதயம் என்பது கடல், மொழி என்பது கரை. இதயத்தில் உள்ளது கரையை அடையும் “என்பது ரூமியின் வாக்கு.. ஜெசிந்தாவின் உரைகள் அனைத்தும் அவரின் இதயம் எவ்வளவு கருணையும் , நேர்மையும் கொண்டது என்பதற்கு சான்று. “எங்கள் செயல்களால் எங்களை அறிந்து கொள்ளுங்கள்” என்பது ஜெசிந்தாவின் தேர்தல் வாக்குமொழி. அரசியல்வாதிகள் உண்மையில் எந்தப் பயமும் ,குற்ற உணர்வும் இன்றி நம்மால் என்ன செய்ய முடியும் என்பதை நன்கு அறிந்து அவர்களால் மக்களுக்கு கடமையாற்ற முடியும் என்ற நம்பிக்கை அளிப்பது நடைமுறை லட்சியவாதம். அதனை ஏற்றுக்கொண்டு செயல்படுத்திக் காட்டியவர் ஜெசிந்தா .

செயல்திறனற்ற தலைவர் என்று ஊடகங்கள் கூச்சல் இட்ட பொழுதும், நம்பிக்கையோடு தொடர்ந்து செயலாற்றினார். OECD அமைப்பை சார்ந்த நாடுகளில் தொடர்ந்து 6.4 சதவிகித உள்நாட்டு வளர்ச்சியை (GDP) நிகழ்த்திக்காட்டினார். அவர் 2017 இல் பதவியேற்ற போது நியூஸிலாந்தின் GDP வெறும் 3.0 சதவிகிதம் தான். வேலையில்லாத் திண்டாட்டத்தை 3.2 சதவிகிதமாகக் குறைத்ததோடு, ஒரு மணிநேர சராசரி ஊதியம் 37.53 நியூஸிலாந்து டொலராக அவரது ஆட்சிக்காலத்தில் தான் உயர்ந்தது. இந்தக் காலகட்டத்தில் பணவீக்கமோ வெறும் 7.2 சதவிகிதம், ஆனால் மற்ற OECD நாடுகளின் பணவீக்கம் 11.6 சதவிகிதம் . வீட்டு வசதி பெறுபவர்களின் எண்ணிக்கையின் சராசரியும் உயர்ந்திருக்கிறது . காலநிலை மாற்ற சட்ட நடவடிக்கைகள் , குழந்தைகள் வறுமை ஒழிப்பு திட்டங்கள் மற்றும் 1970 இல் நடந்த பசுபிக் தீவினரின் மேல் நடந்த வன்முறை நடவடிக்கைகளுக்கு மன்னிப்புக்கோரல் என அவரின் மணி மகுடத்தில் பதிக்க வேண்டிய நவரத்தினக் கற்கள் பல உண்டு .அதனை எழுதுவதற்குத் தனிக் கட்டுரை வேண்டும்.

ஜெசிந்தாவின் நிறைகளைப் பட்டியலிடும்போது குறைகள் இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். அவரின் ஒரே ஒரு குறை என நான் கருதுவது அதீத நம்பிக்கை. தன் மேலேயும் , தனது மக்கள் மேலேயும் கொண்டிருந்த தளராத நம்பிக்கை. கடந்த மூன்று வருடங்களில் உலகிலுள்ள எந்த அதிபருக்கு நடந்திராத கொடிய தனிநபர் தாக்குதல் ,கொலை மிரட்டல் ,பெண் வெறுப்பு , அவரின் மேலும் ,அவரின் குடும்பத்தின் மீதும் மிக மலின பாலியல் சார்ந்த இணைய ( 5 வயது பெண் குழந்தையையும் விட்டு வைக்கவில்லை கயவர்கள்). தாக்குதல்களால் நிலை குலைந்து, தனது நம்பிக்கையை ஒரு கட்டத்தில் கைவிட்ட பிறகு தான் , “இதற்கு மேல் ஓட எனது இயந்திரத்தில் எரிபொருள் சக்தி இல்லை” என்று விரக்தியுடன் தனது பொறுப்புத்துறப்பு உரையில் கூறினார். வெகு நாட்களுக்கு பிறகு என்னால் நேற்று நிம்மதியாக தூங்க முடிந்தது என்று அவர் அடுத்த நாள் கூறியபோது அவரின் வேதனையை நாம் நன்கு அறிந்துகொள்ள முடியும் .

“நேர்மையை வழிபடுவோர் விரைவில் தீண்டப்படாதவராக பின் தங்கிப்போவர் என்ற பயம் பலரைப்போல் எனக்கும் உண்டு” என்று குருதிப்புனல் படத்தில் ஒரு வசனம் வரும். அதைப்போல ஜெசிந்தாவின் பொறுப்புத் துறப்புக்குப் பின்பு அந்தப் பயம் உண்மையாகி விட்டதென்றே சொல்ல வேண்டும். அர்டென் (Arden) என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் சொல்லாராய்ச்சி செய்தால் ’உயர்ந்த இடம்’ என்று பொருள் வருகிறது. அவரின் பெயருக்கு ஏற்ப எப்பொழுதும் நம் இதயத்தில் உயர்ந்த இடத்தில் என்றும் ஜெசிந்தா இருப்பார்.

# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# சிட்னி பொங்கல் விழா-2023

சிட்னியின் மையப்பகுதியான பரமற்றாவில் உள்ள பரமாற்றா பூங்காவில் ஜனவரி மாதம் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, பல்வேறு தமிழ் அமைப்புகள் ஒன்று சேர்ந்து நடத்திய பொங்கல் விழா மிகவும் சிறப்பாக நடந்தேறியது.

இந்த நிகழ்வை சிட்னி தமிழ் மன்றம், தமிழ் வளர்ச்சி மன்றம், தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, UNSW அஞ்சலி தமிழ் சொசைட்டி, தமிழ் ஏதிலிகள் அமைப்பு, தமிழ் ரிசோர்ஸ் (resource) சென்டர், ஆஸ்திரேலியன் தமிழ் கலைச் சங்கம், தமிழ் இஸ்லாமிய அமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் ஒருங்கிணைந்து இதை நடத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிகழ்வில் பல்வேறு ஆடல், பாடல் நிகழ்ச்சிகள் மட்டுமின்றி உறி அடித்தல், கயிறு இழுத்தல், உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்று நிகழ்ச்சி களை கட்டியது.

இந்த நிகழ்வில், Huge McDERMOTT MP(STATE MEMBER FOR PROSPECT), ANDREW CHARLTON MP ( STATE MEMBER FOR PARAMATTA), Dr.GEOFF LEE MP (MINISTER FOR CORRECTIONS), DONNA DAVIS(LORD MAYOR OF PARRAMATTA CITY), SAMEER PANDEY (DEPUTY LORD MAYOR OF PARRAMATTA CITY) LISA LAKE (LORD MAYOR OF CAMMPER LAND CITY) SUMAN SAHA (DEPUTY LORD MAYOR OF CUMBERLAND CITY) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தது சிறப்புக்குரியதாகும். நிகழ்ச்சி அமைப்பாளர்கள் அரசியல் தலைவர்களிடம் வரும் வருட பொங்கல் நிகழ்வை தெருவில் இறங்கி கொண்டாடும் ஊர் விழா போன்ற சூழலில் நடத்த உறுதுணை செய்ய வேண்டும் எனக் கோரிக்கை வைத்தனர்.

இந்த பொங்கல் நிகழ்ச்சி ஒரு நிறைவான நிகழ்ச்சியாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.




CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


MCN Cakes
Sri Lankan Cakes, Sweets & Short Eats
in Dandenong Plaza
Cakes
Cupcakes
Macarons
Finger Foods
Ethiroli Special Offer
10% OFF
Custom Cakes
*valid till 28/02/23 , conditions apply
Custom Cakes:
Birthday Cakes
Wedding Cakes
Engagement Cakes
Authentic Sri Lankan
Ribbon Cakes
Chocolate Cakes
Eclairs and more....
Shop 105, Level 1,
Food court (near Westpac)
Dandenong Plaza
Dandenong
(03) 90188188
/ 0433662477
mcnlittlefoods
இது எங்கட
கடை

# 'பரமற்றா பொங்கல் - 2023

●பரமபுத்திரன்

வையகம் வாழ ஒளியேற்றும் கதிரவனை, முற்றத்தில் பொங்கி முகமலர்ந்து வழிபட்டு, சேற்று நிலத்தில் கால் வைத்து, மக்கள் சோற்றில் கைவைக்க நெல் விளைவித்த உழவர்களுக்கு நன்றிகூறி, தமிழர்கள் கொண்டாடும் திருநாள் தைப்பொங்கல் பெருநாள். தொடக்க காலத்தில் தமிழர்கள் வாழ்ந்த நிலங்களில் நடைபெற்ற தைப்பொங்கல், பின்னர் தமிழர் செல்லும் இடமெங்கும் பரந்து, விரிவடைந்து, இன்று உலகெங்கும் தமிழர்கள் கொண்டாடும் பண்டிகையாக மாறியுள்ளது. தைமகளை வரவேற்று தமிழர்கள் வீட்டு முற்றங்களில் மட்டுமன்றி கோவில்கள், விளையாட்டு மன்றங்கள், வாணிப நிலையங்கள், அரச நிறுவனங்கள், பாடசாலைகள் போன்ற மக்களுடன் தொடர்புள்ள சகல இடங்களிலும் பொங்கல் நடைபெறும். பங்குபெறும் எல்லா மக்களுக்கும் பொங்கலும் வழங்கப்படும். இதுவே பொங்கலின் வழமையும் மகிமையும் ஆகும். அந்த வகையில் ஆஸ்திரேலியாக் கண்டத்தில் பரமற்றா நகரில் 'பரமற்றா பொங்கல்' என்னும் பெயரில் பொங்கல் ஒன்று நடைபெற்று வருகின்றது. இந்த ஆண்டு பரமற்றா பொங்கல் தனது பத்தாவது பொங்கல் நிகழ்வினை, தமிழர்களை மட்டுமன்றி, தமிழர் அல்லாத மக்களையும் இணைத்து, இறைவனை வணங்கி, மங்கள இசை முழங்கி, சுவையான பொங்கலும் வழங்கி, கலைநிகழ்வுகளும் நிகழ்த்தி கடந்த 21 ம் திகதி சனிக்கிழமை (ஜனவரி) பரமற்றா St Patricks cathedral வளாகத்தில் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்துள்ளது.

Community Migrant Resource Centre ஆதரவில் நடைபெற்று வரும் பரமற்றா பொங்கல் நிகழ்வானது முதன் முதலாக 2013 ஆம் ஆண்டு பரமற்றா நகர மண்டப முன்றலில் மாதிரிப் பொங்கலுடன் தொடங்கி நகர மண்டபத்துள் நிகழ்ச்சிகளையும் நடாத்தி முடித்திருந்தது. இந்தப்பொங்கல் நிகழ்வினை Community Migrant Resource Centre நிறுவனத்தில் பணியாற்றும் கொன்சிலா ஜெறோம் என்பரே தொடக்கி வைத்தார்.

Community Migrant Resource Centre என்பது ஆஸ்திரேலியாவில் புதிதாகக் குடியேறும் மக்கள், அதிலும் குறிப்பாக உதவிகள் தேவைப்படும் மக்களுக்காக இயங்கும் ஒரு நிறுவனம்

பத்தாவது பரமற்றா பொங்கலினை CMRC ஆதரவுடன் Diocese of Parramatta, Peace Justice Ecology, Settlement services international, அன்பாலயம் ஆஸ்திரேலியா, ஆஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஆஸ்திரேலியக் கம்பன் கழகம், சந்திப்போம் வாழ்த்துவோம் குழுவினர், ஆஸ்திரேலியா தமிழ் முரசு மற்றும் தமிழ்ப்பெண்கள் அபிவிருத்திக் குழுவினர் ஆகிய நிறுவனங்கள் ஒன்றாகக் கைகோர்த்து கொண்டாடியுள்ளன. இதில் பல அமைப்புகள் ஏற்கனவே நடைபெற்ற பரமற்றா பொங்கலின் பங்காளிகள் ஆவர். நிகழ்வினை சிறப்பிக்க Lord Mayor Donna Davis (Parramatta), Mayor Lisa Lake (Cumberland council), Mayor Peter Gengami (Hills shire council), Hon. Dr Geoff Lee (Minister for corrections, Parramatta state MP), State MP Julia Finn (Granville), Melissa Monteiro (CEO, Community Migrant Resource Centre), Yamamah Agha (Manage, Settlement services international) ஆகியோர் விருந்தினர்களாக வருகை தந்திருந்தனர்.

முற்பகல் 11 மணியளவில் Most Rev Vincent Long (Bishop of Parramatta) பரமற்றா ஆயர் அவர்களின் தலைமையில் இறை வழிபாட்டுடன் நிகழ்வுகள் தொடங்கின. ஆயர் தனது செய்தியில் 1980 ஆம் ஆண்டில் படகு மூலம் ஆஸ்திரேலியா வந்த ஒருவர் தான் என்பதனையும், தானும் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும், உழவுத்தொழில் மட்டுமன்றி, போரால் ஏற்படும் வாழ்வியல் சிக்கல்களில் பட்டறிவு கொண்டவர் என்றும், தமிழ் மக்களின் நிலைமைகளையும் புரிந்துகொண்டவன் என்றும் கூறினார்.

கோவில் மண்டபத்துள் வழிபாடு நிறைவு பெற்றதும், மங்கள இசையுடன் ஆயர், விருந்தினர்கள் மற்றும் விழாவிற்கு வந்திருந்த மக்கள், அனைவரும் ஆலய முன்றலுக்கு அழைத்துவரப்பட்டனர். அங்கே பொங்கலின் சிறப்பினை காட்டும் வாழைகட்டி, கோலம் இட்டு, நிறை குடம் வைத்துக் குத்து விளக்கு ஏற்றப்பட்டிருந்தது. தமிழர் பாரம்பரியப்படி விருந்தினர்களுக்கு மாலை சூடி மதிப்பளிக்கப்பட்டு, மாதிரிப்பொங்கலுக்கு அனைவரையும் அழைத்துச் சென்றனர்.

முதலில் ஆஸ்திரேலிய கீதம் இசைக்கப்பட்டு, பின்னர் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடப்பட்டு, கொன்சிலா ஜெறோம் அவர்களின் வரவேற்புரை இடம்பெற்றது. அடுத்து சிவசிறி. இந்திரன் குருக்கள், Rev. John Jegasothy – (Uniting church) ஆகியோர் உட்பட கலாநிதி. பாலா விக்கினேசுவரன், வழக்கறிஞர் துர்க்கா ஓவன்ஸ், மற்றும் செல்வன். அகலவன் ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் பொங்கல் தொடர்பான உரைகளும், வருகை தந்திருந்த விருந்தினர்களின் உரைகளும் இடம்பெற்றன.

அத்துடன் தமிழர் விழா என்ற பெருமையுடன் தமிழர் மட்டுமன்றி, வெவ்வேறு மட்டத்தில் உள்ள பிற சமூக மக்களையும் அறியச் செய்தமை நிகழ்வின் சிறப்பு. அதே வேளை ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழர்கள் மத்தியில் இன்னும் தேவைகள் உள்ளவர்கள் உள்ளார்கள் என்பதையும் எல்லோர் உள்ளங்களிலும் ஆயர் மூலம் நினைவு படுத்தியமை பாராட்டவேண்டியது.

பரமற்றா பொங்கலின் சிறப்பு நிகழ்வுகளாக உழுதல், நெல் விதைத்தல், பயிர்செய்தல், அறுவடை போன்ற நிகழ்வுகளை வெளிக்காட்டி பொங்கலும் கொண்டாடுதல் என்பவற்றை விளக்கும் வகையில் நடனங்கள் அமைந்திருந்தன. இந்த நடன நிகழ்ச்சிகள் ஆசிரியர் செல்வராஜி இரங்கநாதன் அவர்களின் ஒழுங்கமைப்பில் மவுண்ட்றூயிட் தமிழ்க்கல்வி நிலைய மாணவர்கள், நடன ஆசிரியர் அஜந்தா இந்திரகுமார் அவர்களின் மாணவர்கள், சுகந்தி தயாசீலன் அவர்களின் சிட்னி கலாபவனம் மாணவர்கள், கம்பன்கழகம் ஆரணி மோகன், மற்றும் யசோதா பாரதியின் Bollyகவை நடனப்பள்ளி மாணவர்கள் ஆகியோரால் நிகழ்த்தப்பட்டன. இத்துடன் அன்பாலயம் அமைப்பினரின் ஒழுங்கமைப்பில் சக்தி இசைக்குழுவின் இசை நிகழ்வும் இடம்பெற்றது.

நிகழ்வின் நேர்முக வர்ணனையை ஆஸ்திரேலியா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஊடாக திரு. ஈசன் கேதீசன், திரு. செல்லையா பாஸ்கரன் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர். அன்பாலயம் அமைப்பினர் திரு. நடராசா இரமேஷ் அவர்களின் ஒழுங்கமைப்பில் வருகை தந்த மக்களுக்கு குளிர்பானம், தேநீர், குடிநீர் என்பவற்றை வழங்கிக்கொண்டிருந்தனர். கம்பன் கழக நிர்வாகி திரு. ஜெயராம் ஜெகதீசன் அவர்களின் நன்றியுரையுடன் அரங்க நிகழ்வுகள் நிறைவு பெற, சுவையான சைவ உணவு பரிமாறி, பரமற்றா பொங்கல்விழா இனிது நிறைவேறியது.













# ஆவுஸ்திரேலிய தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பொங்கல் விழா













## தமிழர் திருநாள் ஆஸ்திரேலியா -2023:

# தமிழ் மரபு பகிரும் ஆஸ்திரேலியத் தமிழர்கள் ஒன்றிணைந்த மாபெரும் விழா

கடந்த ஜனவரி 22 ஆம் திகதி , விக்டோரிய மாநிலத் தமிழ் அமைப்புக்களின் ஒன்றிணைந்த முயற்சியில் அமைந்த "தமிழர் திருநாள் ஆஸ்திரேலியா 2023" தைத்திருநாள் கொண்டாட்டம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. வெளியக மற்றும் உள்ளக நிகழ்வுகளை உள்ளடக்கி , சிறுவர் முதல் முதியவர் வரை முழுக்குடும்பத்துக்கும் களிப்புத் தரத்தக்க வகையில் - தமிழர்கள் அல்லாத மற்றைய இனத்தவரும் ரசிக்கத்தக்க வகையில் வடிவமைக்கப்பட்டிருந்த இந்த நிகழ்வு, Keysborough இல் உள்ள Gaelic Park இல் நடைபெற்றது.

நுழைவாயிலில் நிமிர்ந்த வாழை மரங்களோடு இணைந்த அலங்கார வளைவு, வரவேற்பு கூடமாக ஓலைக்குடில், மைதானமெங்கும் காற்றில் அசைந்த வண்ணக்கொடிகள், மோர்த்தண்ணீர்ப் பந்தல், செல்லும் இடமெங்கும் கண்ணுக்கும் மனதுக்கும் இனிமை சேர்த்த வாழை - கரும்பு சோடனைகள் , தோரணங்கள் என தாயக நினைவுகளை மனதில் கொண்டு வந்து இருத்தும் வகையில் அமைந்திருந்த சூழலும், காற்றோடு கலந்து வந்து வரவேற்ற பாரம்பரிய இசைக்கருவிகளின் முழக்கங்களும் பரவசத்தை அளித்தன. காலை 8:00 மணிக்கு ஊரெல்லாம் கூடிப் பொங்கும், கிட்டத்தட்ட ஐம்பது பானைகள் இடம்பெற்றிருந்த பெரும் சமூகப் பொங்கலோடு ஆரம்பமானது. சமூகப் பொங்கலைத் தொடர்ந்து, இசைக்கலைஞர்கள், விருந்தினர்கள் , "முளைப்பாரி" சுமந்த பெண்கள் உட்பட்ட அனைவரும், சமூகப் பொங்கல் நடைபெற்ற இடத்திலிருந்து அணிவகுத்து சென்று மைதானத்துக்குள் நுழைந்தார்கள். அங்கே இயற்கைக்கு படையலும் முளைப்பாரியை சுற்றி கும்மி நடனமும் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, வரவேற்புரை வழங்கிய , நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் சிவசுதன் குலேந்திரசிங்கம் அவர்கள், 2011 ஆம் ஆண்டு கேசி தமிழ் மன்றத்தின் சிறிய பொங்கல் கொண்டாட்டமாக ஆரம்பித்த இந்த நிகழ்வு இன்று , பல தமிழ் அமைப்புகளின் கூட்டு முயற்சியாக - எந்த நிறுவன அடையாளமும் இன்றி, "தமிழ் ஆஸ்திரேலியர்கள்" எனும் எம் சமூக அடையாளத்தை முன்னிறுத்தும் - விக்டோரியத் தமிழர்களின் ஒன்றிணைந்த தனித்துவமான அடையாளமாக, மாநில அரசாங்கத்தின் பெரும் அங்கீகாரத்தைப் பெற்ற நிகழ்வாக பரிணமித்திருக்கின்றது என்றார். மேலும் அவர், தைப்பொங்கல் கொண்டாட்டம் - மரபு பேணுதல் - எம் வாழ்வியலை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லல் என்கின்ற அடிப்படை நோக்கங்களோடு , "பகிர்தல்" என்பதும் ஒரு பல்லினக் கலாசார நாட்டில் ஒரு விழாவின் வெற்றிக்கு மிகவும் அவசியம் என வலியுறுத்தினார். மேலும் எம் மரபுகளைப் பேணும், எம் சிறப்பான இருப்பை - பயனுள்ள வாழ்வியலை - செழிப்பான கலை வடிவங்களை மற்றைய சமூகங்களோடு பகிரும் இந்த நிகழ்வை இன்னும் உயர்த்த - ஆஸ்திரேலியா முழுவதும் பரந்த முன்னெடுப்பாக மாற்ற சமூகத்தின் ஆதரவை வேண்டியதுடன், ஜனவரி மாதத்தை "தமிழ் மரபுத் திங்கள்" என மாநில / மத்திய அரசாங்கங்கள் பிரகடனப்படுத்த வேண்டும் எனும் கோரிக்கையை தமிழ் அமைப்புகளின் சார்பில் அங்கு வருகை தந்திருந்த அரசியல் தலைவர்களிடம் முன்வைத்தார். அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் உரைகள் இடம்பெற்றன.

உரைகளைத் தொடர்ந்து, வெளியேயும் உள்ளேயும் நிகழ்ச்சிகள் சமாந்தரமாகத் தொடங்கின. வெளியகத்தில் அமைந்த மேடையில் தமிழர் கலைநிகழ்வுகளோடு பிற இனத்தவர்கள் சிலரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. தமிழரின் பாரம்பரிய இசைக்கருவிகள் , ஆட்டக்கலைகள் என்பவற்றை வழங்க இந்தியாவிலிருந்து Sound மணி அவர்களும், ஏனைய மாநிலங்களிலிருந்து பல கலைஞர்களும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் மைதானத்தின் இன்னொரு பகுதியில், சிறுவர்களும் பெரியவர்களும் கிளித்தட்டு போன்ற பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளில் மிகுந்த ஆர்வத்துடனும் களிப்புடன் பங்குபற்றிக்கொண்டிருந்தார்கள். பாரம்பரிய விளையாட்டுகளின் மீதான சிறுவர்களின் ஆர்வம் மனதுக்கு நிறைவைத் தந்தது . சிறுவர்களுக்கான கேளிக்கைச் சவாரிகள் பெரிய அளவில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. இந்தச் சவாரிகள் மற்றைய இனங்களைச் சார்ந்தவர்களையும் நிகழ்விற்கு வரத் தூண்டின. இருபதுக்கும் மேற்பட்ட உணவு / பானங்கள், உடை , சேவை நிறுவன அங்காடிகள் நிகழ்விற்கு களையூட்டின. தீயணைப்புப் படையினர், காவல்துறையினர் போன்றவர்கள் தம் சேவைகள் குறித்த கல்வியூட்டல் செயல்பாடுகளில் ஈடுபட்டார்கள்.

உள்ளகத்தில், புகைப்படக் கண்காட்சி , Cardboard நகரம், பட்டறைகள் எனப் பல நிகழ்ச்சிகள் நடந்தன. மாலை கட்டல், மட்பானை செய்தல் , கொழுக்கட்டை செய்தல் போன்றவற்றில் சிறுவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றினார்கள். மேலும் முதியோருக்கான சேவைகள் போன்றவற்றை வழங்கும் நிறுவனங்கள் மக்களோடு தங்கள் பணிகள் குறித்து கலந்துரையாடினார்கள். புதுப் பொலிவுடன், முதன்முறையாக ஆங்கில மொழியாக்கங் களையும் உள்ளடக்கி வெளிவருகின்ற இளவேனில் சஞ்சிகை வெளியிடப்பட்டது. மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து சிறப்புச் செய்த இந்த நிகழ்வு பிற்பகல் 4:00 மணியளவில் நிறைவுபெற்றது. செந்தூரன் குலராசன் கைகொடுத்த அனைவருக்கும் தமிழ் அமைப்புகளின் சார்பில் நன்றிகளைப் பகிர்ந்தார்.

விக்டோரியாவின் நான்கு திசைகளிலும் வாழும் தமிழர்களை ஒரு இடத்தில் கூட்டுகின்ற - எம் மரபு பேணலோடு அதன் பல்லினக் கலாசார சமூகங்களோடான பகிர்விற்கு நடைமுறை வடிவம் கொடுக்கின்ற - தன் வீச்சால் அரசியல் தலைவர்களையும் ஏனைய சமூகத் தலைவர்களையும் ஈர்க்கின்ற - "தமிழ் ஆஸ்திரேலியர்கள்" யஎனும் அடையாளத்திற்கு வலுச்சேர்க்கின்ற "தமிழர் திருநாள் ஆஸ்திரேலியா" காலத்தின் தேவை - எம் பெருமை.












# குயின்ஸ்லாந் மாநில மக்களின் பொங்கல் விழா

குயின்ஸ்லாந்து தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கோலகலமான பொங்கல் விழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள்..

















எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI


மாசி 2023

1940ஆம் வருடம் தமிழ் நாட்டில் பிறந்த தியடோர் பாஸ்கரன் தலைசிறந்த தமிழ்த்திரைப்பட வரலாற்றாளர், சூழலியல்,கானுயிர் ஆர்வலர். தமிழின் குறிப்பிடத்தக்க ஆய்வாளர்களில் ஒருவரான அவர் கானுயிர், சூழிலியல் சார்ந்து தமிழிலும் ஆங்கிலத்திலும் பல கட்டுரைகளை எழுதி வருகிறார். அவர் சிட்னி வந்திருந்தபொழுது ‘எதிரொலி’க்காக அவருடன் நடத்திய உரையாடலின் தொகுப்பு.



நேர்காணல்:
ஆனந்தன் வசந்த கிருஷ்ணமூர்த்தி

# தமிழனின் தணியாத சினிமா மோகம்: காரணம் மட்டும் எனக்கு இன்னும் புரிபடவில்லை




**கேள்வி : நீங்கள் அஞ்சல் துறையில் மிக உயரிய பதவியில் இருந்தீர்கள்.எப்பொழுது இந்த ஆராய்ச்சித் துறையை தேர்ந்தெடுத்தீர்கள்?**

**பதில்:** 1974 இல் மெட்ராஸில் இருந்த பொழுது, நான் தீராத மனச்சோர்விலிருந்தேன். அப்போது தான் தமிழ்நாடு வரலாற்றுக் கழகம் எந்தப் பணியில் இருந்தாலும் இரண்டு வருடங்களுக்கு அந்தப் பணிக்கான ஊதியத்தை நாங்கள் தருகிறோம், வரலாற்றுத் துறையில் உங்களுக்குப் பிடித்தமான எதை வேண்டுமானாலும் செய்யுங்கள் என்று அறிவித்திருந்தனர். அமெரிக்கா, ஆங்கில ஆராய்ச்சியாளர்கள் நிறையப்பேர் இருந்தனர். அவர்களிடம் நிறையப் பணமும் இருந்தது. இவர்கள் போக முடியாத துறை தமிழ் சினிமா - ஏனென்றால் உங்களுக்கு மொழி தெரிய வேண்டும். அதனால் தான் சினிமா பற்றிய ஆய்வுத்துறையை தேர்ந்தெடுத்தேன். சினிமா பற்றிய அடிப்படையான புத்தகங்கள் படித்திருக்கிறேன். சினிமா என்பது மற்றவர்கள் பார்ப்பதை விட ,அது வேறு விதமானது என்ற புரிதல் எனக்கு இருந்தது. சுதந்திரப் போராட்டத்தில் தமிழ் நாடகம், சினிமாவின் பங்கு குறித்து message bearers என்ற தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதினேன்.

**கேள்வி : வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் இங்கே வந்து ஆராய்ச்சி செய்ததன் நோக்கம் என்னவாக இருக்கும் ?**

**பதில்:** பல காரணங்களைச் சொல்வார்கள். CIA AGENT என்று கூடச் சொல்வதுண்டு. நான் அப்படிக் கருதியதில்லை. அந்த ஆராய்ச்சியாளர்கள் எல்லாம் சிறந்த மானுடவியல் அறிஞர்கள்.

**கேள்வி : ‘பாம்பின் கண்’ புத்தகத்தில் சினிமா என்பது காட்சி மொழி என்று சொல்லப்படுகின்றது. ஆரம்ப காலத்திலிருந்து நாம் தமிழ் சினிமாவை வசன ஊடகமாகவே பயன்படுத்தி வருகிறோம்.நாம் எப்பொழுது மாறுவோம்? அதற்கான அறிகுறிகள் தென்படுகின்றனவா ?**

**பதில்:** ஒவ்வொரு கலைக்கும் அடிப்படையான இயல்பு ஒன்று உண்டு. அதேபோலதான் சினிமாவுக்கு காட்சிப் படிமம். கடந்த 10 வருடங்களாக மிகப் பிரமாதமான முயற்சிகள் தமிழில் நடக்கின்றன. நல்ல சினிமாவுக்கு நல்ல ரசிகன் வேண்டும். அதற்கு நல்ல சினிமா ரசனை வேண்டும். சினிமா என்பது இரண்டு கண்கள் மட்டும் சார்ந்தது அல்ல என்று சிவகுமார் சொல்வார். சினிமா என்பது கேட்பது மற்றும் பார்ப்பது முதலான புலன்கள் மட்டுமே சார்ந்ததல்ல . மனிதனின் கண்டுபிடிப்புகளிலேயே முதன்மையானவையாக நான் கருதுவது ஒன்று மொழி , மற்றொன்று சினிமாக் கமரா . மனிதன் தான் நினைப்பதில் 20 சதவிகிதம் மட்டுமே பேச முடியும். அந்தப் போதாமையின் காரணமாகவே ஓவியம், நடனம், இசை, இலக்கியம் போன்ற மற்றைய கலைகளெல்லாம் இருக்கின்றன. சினிமா என்பது நமது உணர்வுகளைப் பிரதிபலிக்கக் கூடியது. யாராவது ஒரு ஓவியத்தைக் காட்டி எழுத்தில் விளக்கச் சொன்னால் எப்படிச் சொல்வது? எழுத்தில் சொல்வதென்றால் ஓவியத்தை வரைந்திருக்க வேண்டியது தேவையில்லையே. ஒருமுறை மலையாள இயக்குநர் அரவிந்தன் இயக்கிய ’எஸ்தப்பன்’ திரைப்படத்தில் கடைசிக் காட்சியில்’ கடலில் தொடர்ச்சியாக அலை வருவதுபோல் ஏன் வைத்திருக்கிறீர்கள்?’ என்று ஒரு நிருபர் கேட்டார் . அதற்கு அரவிந்தன் ’எனக்குத் தெரியாது ’என்று பதிலளித்தார் . ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அனுபவம் கிடைக்கும் இந்தக் காட்சியில், இதையெல்லாம் எழுத்திலோ, பேச்சிலோ சொல்ல முடியாது. இதுதான் திரைமொழி. காட்சிமொழியைப் பிரதானமாகக் கொண்டு நிறையத் தமிழ்ப் படங்கள் தமிழிலும் இருக்கின்றன. உன்னைப் போல் ஒருவன், யாருக்காக அழுதான் போன்ற பல படங்களைச் சொல்லலாம்.

**கேள்வி : ஒரு பக்கம் சினிமா நாயகர்களைத் தலைவனாக ஏற்றுக்கொள்வதும், இன்னொருபுறம் சினிமாவை கேவலமாகப் பார்ப்பதுமாக முரண்பாடு இருக்கிறதல்லவா ?**

**பதில்:** சினிமா என்பது பொதுச் சமூகத்தில் மிகவும் கீழ்த்தரமாகப் பார்க்கப்படுகிறது. இங்கே ஆஸ்திரேலியாவில் சினிமா பற்றிய படிப்பு இருக்கிறது... ஆனால் தமிழ்நாட்டில் சினிமா சார்ந்த விவாதம் கூட கல்வி வளாகங்களில் நடைபெறுவது கிடையாது. சினிமா பற்றிய ஒரு கேவலமான அபிப்பிராயம் ஆரம்பத்திலிருந்தே இருந்து வருகிறது. இரண்டும் வேறுவேறு தளம். சினிமாவைக் கேவலமாக நினைப்பது கல்விப்புலம் ,அரசு,மதம் போன்றனவே. யாராவது ஒரு மதத் தலைவர் சினிமாவை பற்றிப் பேசுவதைக் கேட்டதுண்டா? நான் சினிமா பற்றி எங்கேயாவது பேசினால் , உடனே சிரிக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

**கேள்வி : ஆனால் மலையாளத் திரையுலகம் அவ்வாறு இல்லையே?**

**பதில்:** மலையாளத் திரைப்படம் குறைந்த பொருட்செலவில் எடுக்கப்படுவது. அதனால் ஸ்டூடியோ இல்லை, ஆடல் , பாடல் இல்லாமல் யதார்த்தப் பாணிக்குச் சென்றுவிட்டார்கள். நம்மாட்கள் இசையை முக்கியமாக்கி விட்டார்கள். ( படம் எப்படி இருக்கு என்று கேட்டால், பாடல்கள் நல்லா இருக்கு என்று பதில் சொல்வார்கள்)

**கேள்வி : சினிமாவில் கெட்ட வார்த்தைகள் பயன்படுத்துவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**பதில்:** கெட்ட வார்த்தை என்று எதுவும் கிடையாதென்று தான் நான் நினைக்கிறன் .கிராமங்களில் பார்த்தீர்களென்றால் கெட்ட வார்த்தை இல்லாமல் அவர்களால் பேச முடியாது. கிராமம் சார்ந்த பல படங்களில் சொல்லும் பாதி வார்த்தைகள் தணிக்கை அதிகாரிகளுக்குப் புரியாது. கத்தரி விழாமலேயே அந்தக் காட்சிகள் திரைக்கு வந்துவிடும்.

கெட்ட வார்த்தைகளை விட மோசமான விடயமென நான் சொல்வது மாற்றுத் திறனாளி-களை இழிவுபடுத்தும் காட்சிகளை அமைப்பது, உடலமைப்பு ரீதியான கேலிக்காட்சிகள் போன்றவற்றைத்தான்.இதற்கென்றே நடிகர்களை வைத்திருந்தார்கள் . புளிமூட்டை ராமசாமி ,குண்டு கல்யாணம் ,பக்கோடா காதர் மற்றும் பலர் சினிமாவில் இப்படியான கேலிக்குள்ளாகும் நடிகர்களே. சினிமாவில் திக்குவாய் , காது கேளாதவர்களை இழிவுபடுத்தல் மிகக் கொடுமை.

**கேள்வி : சினிமா அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் சமூக மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறதா? தொடர்ந்து கௌரவக்கொலைகள் நடந்து கொண்டிருக்கின்றனவே . சமூக மாற்றத்துக்கு வாய்ப்பு இருக்கிறதா?**

**பதில்:** வாய்ப்பு இருக்கிறது.. ஆனால் நடந்திருக்கிறதா என்பதைக் கண்டுபிடிப்பதற்கு நமக்கு எந்த அளவுகோலும் இல்லை.பராசக்தி வந்த காலத்தில் குணசுந்தரி என்ற திரைப்படம் பெருவெற்றி பெற்றது. ஔவையார் படமும் வந்தது.

(15ஆம் பக்கம் பார்க்க)

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

பராசக்தி திரைப்படம் என்ன சமூக மாற்றத்தைக் கொண்டுவந்தது? அளவீடு செய்ய நாம் கணக்கீடு எடுத்தால் தான் சொல்ல முடியும்.

**கேள்வி : என் அனுபவத்தில் சாதியத்தைப் பற்றி பேசிய படம் வேதம் புதிது. ஆனால் பொதுவான எல்லாப் படங்களும் சாதியைக் கொண்டாடும் படங்களாகவே இருந்துள்ளனவே (உதாரணத்துக்கு தேவர் மகன், சின்னக்கவுண்டர்)?**

**பதில்:** நான் இந்த விஷயத்தை மறுதலிக்கின்றேன். தமிழ் சினிமாவின் வயது 100 .நீங்கள் கூறிய வேதம் புதிது 60 ஆவது வயதில் வந்தது. அதற்கு முன்னே 60 வருடப் படங்கள் இருக்கின்றன. 1939 இல் தியாகபூமி என்ற படம் வந்தது. அதை எழுதியது,நடித்தது பாப நாசம் சிவன் முதலான பிராமணர்கள். முதல் காட்சியில் மழையால் பாதிக்கப்பட்ட சேரி மக்களை கோவில் குரு கோவிலுக்கு அழைத்து இருக்கச் சொல்வார் .அதே போன்று விமோசனம் ,அரிஜனப்பெண் போன்ற பல படங்களையும் சொல்லலாம். இந்தப் படங்களின் பிரதியெல்லாம் இப்போது இல்லை. அவற்றின் கதை மட்டுமே இருக்கிறது. ஜாதியை எதிர்த்து பல படங்கள் 1930 களில் வந்தன.ஏனென்றால் தேசியப்போராட்டத்தின் அங்கமாக ஜாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு என்பனவும் இருந்தன.

**கேள்வி : இந்தப் படங்கெளெல்லாம் சுதந்திரத்துக்கு முன்பு வந்தவை. ஆனால் இப்போதுள்ள காலகட்டத்தில் அரசியல் கட்சிகள் சாதியத்தை ஊக்குவிப்பதால், சாதியத்தை எதிர்க்கும் படங்கள் பெரும்பாலும் வருவதில்லையே?**

**பதில்:** இருக்கின்றனவே . உதாரணத்துக்கு ருத்ரய்யாவின் ‘கிராம அத்தியாயம்’, ஜான் ஆபிரகாமின் ‘அக்கிரகாரத்தில் ஒரு கழுதை’ போன்ற பல படங்கள் .

**கேள்வி : முப்பது வருட இலங்கை யுத்தத்தினால் பல்வேறு துறைகள் அழிந்துவிட்டன. யுத்தத்துக்கு முந்திய இலங்கைத் தமிழ் சினிமா பற்றி எதாவது படங்கள் வந்திருக்கின்றவா அல்லது புத்தகம் ஏதாவது உள்ளதா ?**

**பதில்:** நான் ஆய்வு செய்ததில்லை . ஆனால் திரைப்படத் துறை இருந்திருக்கிறது. அதைப் பற்றிய இரண்டு புத்தகங்கள் வந்திருக்கின்றன .அவைகள் எனக்குக் கிடைக்கவில்லை .

**கேள்வி : இலக்கியத்தைப் படமாக்கும் முயற்சிகள் அவ்வளவாக தமிழில் இல்லையே. இருந்தாலும் மற்ற மொழிப் படங்களுடன் ஒப்பீடு செய்யும்போது மிகவும் குறைவு .அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?**

**பதில்:** இலக்கியத்தைத் தழுவி படம் எடுக்கும் இயக்குநருக்கு இலக்கியத்தைப் பற்றிய சுரணை வேண்டும் மற்றும் சினிமா பற்றிய நல்ல பரிச்சயம் வேண்டும். சினிமா பற்றிய எந்தப் பரிச்சயமும் இல்லாதவர்கள் மிகப்பெரும் வெற்றிப் படங்கள் எடுத்திருக்கிறார்கள். உதாரணத்துக்கு எஸ்.எஸ்.வாசன் . சினிமாவின் வெற்றியைப் பற்றி நாம் பேசவில்லை. நல்ல படங்கள் வருகின்றன. உதாரணத்துக்கு அழகர்சாமியின் குதிரை, சசியின் பூ, சிறை என்பவற்றை இங்கு சொல்லலாம்.

**கேள்வி : வணிகப் படங்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது அளவில் குறைவுதான் இல்லையா ?**

**பதில்:** எல்லாப் படங்களுமே வணிகப் படங்கள். காசு கொடுத்து, டிக்கெட் வாங்கி பார்க்கும் எல்லாப் படங்களும் வணிகப் படங்கள் தான். யாருக்காக அழுதான் படம் ஒரு வெற்றிப் படம் தான் .

**கேள்வி : மலையாளப் படங்கள் மிகக் குறைந்த முதலீட்டில் வருபவை. அவர்கள் தமிழ்நாட்டில் உள்ளதுபோல் சென்னைக்குப் போய் தான் படமெடுக்கும் நிலை இல்லை. இடுக்கி, பாலக்காடு, திருச்சூர் என்று ஏதாவதொரு இயக்குநர் இருக்கும் இடத்தில் படம் எடுத்து, வெற்றியும் பெறுகின்றனரே?**


**பதில்:** நாம் மலையாள இயக்குநர்களை ஒப்பீடு செய்யவே முடியாது. சினிமா என்ற கலை பற்றிய பரிச்சயமும், அறிவும் அவர்களுக்கு உண்டு. புத்தகக் கடைக்குச் சென்றால் சினிமா பற்றிய நிறையப் புத்தகங்கள் உள்ளன. நிறையக் கில்லாடிகள் அங்கே உண்டு. மலையாளத்தில் அடூர் கோபாலகிருஷ்ணன், அரவிந்தன், வாசுதேவன் நாயர் ஜெயராஜ் என்போர் போன்று இங்கேயும் தமிழில் மணிகண்டன், அம்ஷன்குமார் ,வெற்றிமாறன் என்று நிறையப் பேர் இருக்கவே செய்கிறார்கள்.

**கேள்வி : வேற்றுமொழி இயக்குநர்கள் படம் எடுப்பதாலேயே இலக்கியம் சார்ந்த படங்கள் வருவதில்லை என்று நினைக்கிறீர்களா?**

**பதில்:** இல்லையே. Jane Austin கதையைத் தழுவி கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன் என்ற படத்தை ராஜீவ் மேனன் எடுத்திருக்கிறார் .

**கேள்வி : முடிவுகளை எடுப்பவர்கள் (policy makers) மட்டத்தில் கலை சார்ந்த பரிச்சயம் இல்லாததே இதற்கான காரணம் .அவர்களுக்கு ஏதாவது ஒரு கற்கையை ( crash course ) கொடுத்தால் பெரிய மாற்றம் வருமென்று நினைக்கிறீர்களா ?**

# தமிழனின் தணியாத சினிமா மோகம்: காரணம் மட்டும் எனக்கு இன்னும் புரிபடவில்லை




**பதில்:** அதற்கு அழகியல் சார்ந்த உள்ளுணர்வு வேண்டும். சிட்னி மாதிரி ஊரில் இருக்கும் உங்களுக்கு நான் இதை விளக்க வேண்டியதில்லை. புத்தகக் கண்காட்சி நமது ஊரில் நடக்கிறது. அதில் வெளியாகும் புத்தகங்களைப் பாருங்கள், உங்களுக்கே விளங்கும். பாரதியார் பற்றிய புத்தகம் என்றால் பாரதியார் படத்தைப் போட்டு விடுவார்கள். ஒரு புத்தகத்தின் அட்டை ,தலைப்பு உங்களை அப்படியே ஈர்க்க வேண்டும். அழகியல் சார்ந்த அடிப்படை உணர்வு வேண்டும்.இந்தப் படம் அழகாக இல்லையென்றால் ,ஏன் அழகாக இல்லை என்பதை எப்படி விளக்குவது?

**கேள்வி : எங்களுக்கெல்லாம் இங்கே வந்த பிறகு அழகியல் உணர்ச்சி பற்றிய சிறிதளவாவது பரிச்சயம் உண்டு.இங்கே பக்கத்திலேயே அருங்காட்சியகம் உள்ளது. அதனால் வாய்ப்பு இருக்கிறது. குழந்தை களுக்கும் பள்ளியில் சொல்லித்தருகிறார்கள். ஆனால் நமது ஊரில் எல்லோருக்கும் அதைப் பற்றிய எந்த ஒரு வாய்ப்பும் இல்லையே?**

**பதில்:** நாம் இலக்கியங்களைப் பள்ளிக்கூடங்களில் படிக்கிறோம் .ஆனால் பிம்பத்தைப் பற்றிச் சொல்லிக் கொடுப்பதில்லை. யாருக்காவது உலகத்தில் தலைசிறந்த ஓவியம் இதுதான் என்று சொல்லி கொடுத்திருக்கி றார்களா? எப்படி ஒரு காட்சிப் பிம்பத்தை அணுகுவது என்று நமக்குத் தெரியாது.இதுதான் நமக்கும், சினிமாவுக்கும் இடையேயுள்ள அடிப்படையான பிரச்சினை. சினிமா அழகியல் என்பது முழுத் திரையில் வரும் காட்சிகளை அடக்கியது. ஆனால் நமது மக்கள் நடுவில் மட்டும் தான் பார்ப்பார்கள்.

**கேள்வி : குழந்தைகளை வைத்துக்கொண்டு தமிழ் சினிமாவைப் பார்ப்பது மிகவும் சிரமமாக உள்ளது. எப்போது வன்முறை மற்றும் ஆபாசக் காட்சிகள் வரும் என்ற பயத்திலேயே பார்க்க வேண்டியிருக்கிறதே?**

**பதில்:** ஆபாசக் காட்சிகளை விட வன்முறைக் காட்சி களின் தாக்கம் அதிகம். வன்முறையின் வலி குழந்தைகளுக்குப் புரியும். ஆனால் குழந்தைகளுக்கு ஆபாசக் காட்சிகளின் தாக்கம் புரியாது .இந்தத் தணிக்கை அதிகாரிகள் ஆபாசக் காட்சிகளை மட்டுமே கத்தரி போட பார்ப்பார்கள். சுப்ரமணியபுரம் , பாண்டவர்பூமி படங்களின் வன்முறைக் காட்சிகளைப் பார்க்கமுடியுமா?

**கேள்வி : நீங்கள் சினிமா, கானுயிர், சூழலியல் போன்ற பல்வேறு துறைகளில் ஈடுபட்டு வருகிறீர்கள். ஆனால் மூன்றும் வெவ்வேறு துறைகள். எவ்வாறு உங்களால் தொடர்ச்சியாக அந்த ஆர்வத்தை தக்கவைத்துப் பயணிக்க முடிகிறது?**

**பதில்:** காரணம் தெரியவில்லை ..அது இயல்பாகவே வந்தது தான் என்று நினைக்கிறேன் .

**கேள்வி : நீங்கள் கடந்த இருபது வருடங்களாக ஆஸ்திரேலியா வந்து செல்கிறீர்கள்.. ஒப்பீட்டு அளவில் தமிழ்நாட்டிற்கும், ஆஸிக்கும் உள்ள சிறந்த விஷ யங்களாக நீங்கள் கருதுவது எவை ?**

**பதில்:** தற்காலத் தமிழிலக்கியம் சிறப்பாக இருக்கிறது. தற்கால தமிழ் சினிமாவிலும் நல்ல முயற்சிகள் வருகின்றன. உதாரணத்துக்கு நட்சத்திரம் நகர்கிறது, குதிரைவால் போன்றன. ஆஸ்திரேலியா பற்றிச் சொல்வதென்றால் அவர்களின் ஏற்றுக்கொள்ளும் தன்மை. வியட்நாம், இலங்கை , சிரியா ,லெபனான் போன்ற எல்லா மக்களையும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர் . இனவெறி ,கலவரம் எதுவும் இல்லாமல் இருக்கிறது .சமூகம் வெகுவாக ஒழுங்கமைவுடன் இருக்கிறது.



# தமிழகத் தம்பியும்

**தமிழகத் தம்பி :** அண்ணே, என்ன ஒரு மாசத்துக்கும் மேலா ஆளையே காணக்கிடைக்கல?

**ஈழத்து அண்ணன்:** அதோ, ஒருக்கா உங்கட ஊர்ப்பக்கம் ஒரு விசிட் அடிச்சிட்டு வந்தன்

**தமிழகத் தம்பி :** நம்ம ஊருக்கா? ஏதும் விஷேசமாண்ணே? சொல்லியிருந்தா நானும் அப்பிடியே ஜாய்ண்ட் ஆகியிருப்பேனே

**ஈழத்து அண்ணன்:** ஒரு சொந்தக்காரரர் திடீரெண்டு செத்ததால சொல்லாமல் கொள்ளாமல் போகவேண்டி வந்திட்டு. போனதும் ஒரு வகையில நல்லதாப் போச்சு, சென்னைப்புத்தகக் கண்காட்சியையும் அப்பிடியே ஒருக்கா எட்டிப் பார்த்திட்டு வந்தன்

**தமிழகத் தம்பி :** சூப்பர்ணே! ஒங்களோட லக்கு நீங்க போனப்போ இந்தக் கண்காட்சியும் நடந்திருக்கு. அப்புறம் எப்பிடி நல்ல கூட்டமா எக்ஸிபிஷன்ல? என்னென்ன புக்ஸ் வாங்கினீங்க?

**ஈழத்து அண்ணன்:** அதயேன் கேக்கிறாய். அங்க கூட்டத்துக்கு அளவேயில்லை. அப்பிடிச் சனம். பத்துப் பதினைஞ்சு புத்தகம் வாங்கினன். வாசிச்சுப் போட்டு உனக்கும் தாறன்.

**தமிழகத் தம்பி :** எங்க ரைட்டர்ஸ் காட்டில மழைதான் இந்தக் கண்காட்சியால. உங்க ஊர் ரைட்டர்ஸ் பாவங்கதான்.

**ஈழத்து அண்ணன்:** அங்கதான் பிழை விடுறாய். இந்தமுறை சென்னைக் கண்காட்சியில எங்கட ஆக்கள் தான் கூட. எங்க தடுக்கி விழுந்தாலும் சிறிலங்காக் காரரில தான் தடுக்கி விழவேண்டி இருந்ததெண்டாப் பாரன்

**தமிழகத் தம்பி :** என்னண்ணே சொல்றீங்க? அப்போ உங்க ரைட்டர்ஸுக்கு நம்ம ஊர்ல செம டிமாண்ட் வந்திருச்சு போல

**ஈழத்து அண்ணன்:** கொஞ்சப்பேருக்கு அப்பிடி வரவேற்பு இருக்குத்தான் . எல்லாரும் அப்பிடியெண்டில்லை. முக்கியமா எங்கட வெளிநாட்டுக்காரர் டொலரை விசுக்கித் தள்ள , மெட்ராஸில புத்தகங்களா அடிச்சுக் குடுப்பினம். பிறகும் தங்களுக்குத் தெரிஞ்ச ஆக்களுக்கு தண்ணி, வெண்ணி வாங்கிக் குடுத்து ஒருமாதிரி புத்தகம் பற்றி புரமோட் பண்ணி பெரிய ஆள் மாதிரிக் காட்டுற விளையாட்டெல்லாம் நடக்குது கண்டியோ

**தமிழகத் தம்பி :** நம்ம ஊர்ல அரசியல்வாதிங்கதான் இப்பிடி ஓட்டுக்காக செய்வாங்க. உங்க நாட்டு ரைட்டர்ஸும் அப்படிச் செய்யிறாங்களே.

**ஈழத்து அண்ணன்:** தேவையான அளவு உழைச்சுப் போட்டினம். இனிக் கடைசிக் காலத்தில 'அவர் அப்பிடிச் செய்தார், இப்பிடி எழுதினார்' எண்டு எல்லோரும் புளுக வேணுமெல்லோ. அந்தப் பேர் புகழுக்குத்தான் உவ்வளவு ஆசை. உங்கட ஊர்க்காரரும் காசுக்காக இவையை கண்டபடி புகழ்ந்து பப்பாவில ஏத்தி, காசு பாக்கினம்.

**தமிழகத் தம்பி :** அண்ணே அப்போ நீங்களும் அடுத்தவாட்டி புத்தகம் போடுறீங்க, டொலரை விசுக்கிறீங்க. உலகப் புகழ் எழுத்தாளரா மாறுறீங்க. சரியா அண்ணே?

**ஈழத்து அண்ணன்:** நீ சொன்னாச் செய்யத்தானே வேணும். அதுக்குப் பிறகு நீ என்னை 'ரைட்டர் சார்' எண்டுதான் கூப்பிடவேணும்,
சரியோ?

**தமிழகத் தம்பி :** ஒகேண்ணா!

**ஒற்றன்**



# ஈழத்து அண்ணாவும்

# காணி என்றால் என்ன?

# What is land?

**சட்டத்தரணி - த.நா.ஜெயராசசிங்கம்**

இவர் முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட உதவி விரிவுரையாளர். பின்னர் பிரிட்டனில் சட்டம் பயிற்று சட்டத்தரணியாகத் தேர்ச்சி பெற்றவர். பின் ஆஸ்திரேலியா மொனாஷ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். அதன் பின்னர் ஆஸ்திரேலியா விக்ரோறியா மாநிலத்தில் வழக்கறிஞராகத் தகுதிபெற்றவர். தற்போது சட்டம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்.

"காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும்" என்று பாடினான் அமரகவி சுப்பிரமணிய பாரதி.

முதலில் 'காணி என்றால் என்ன?' எனப் பார்ப்போம்.

## What is land?

'காணி' என்பது நாடாளுமன்ற நியதிச்சட்டத்தாலும் பொதுச் சட்டத்தாலும் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

இவைபற்றிச் சிறிது ஆராய்வோம்.

## The Real Property Act 1900

(New south wales (NSW) (RPA) Section 3 ஆனது காணி (Land) என்பதை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றது(defines).

காணி என்பது "குடியிருப்பு வீட்டுடனான நிலம், அடுக்கு மாடி வீடு, உறுதியான பரம்பரை நிலம் அல்லது கட்டடம், அல்லது ஒரு பொருளற்ற பம்பரை வாடகை போன்றவை அல்லது சொத்து அல்லது நலன்கள்" எனக் குறிப்பிடுகின்றது.

இதேபோன்ற வரைவிலக்கணங்கள் Conveyancing Act 1919 (NSW) (CA) S7 (1) லும் Incorporations Act 1987 (NSW) S 21 (1) லும் காணப்படுகின்றன.

பொதுச்சட்டமானது காணி (Common Law) என்பதை பின்வருமாறு வரைவிலக் கணப்படுத்துகின்றது. காணி அல்லது நிலம் என்பது 'நில மேற்பரப்பு (Surface), நிலத்தின் கீழ் உள்ள நிலத்தின் மேலுள்ள வான்வெளி (Airspace), நிலத்தின் மேல் வளர்கின்றவை அனைத்தும் மேலும் நிலத்திலுள்ள பொருந்தங்கள் இவை அனைத்திலும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணமானது மரபுரீதியில் Cujus est solum என்ற லத்தீன் மொழி பொது உண்மையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் மேற்குறிப்பிட்ட லத்தீன் மொழி பொது உண்மைத்தன்மை கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது

உதாரணமாக புசகைகவைாள என்ற இங்கிலாந்து நீதியரசன் மேற்குறிப்பிட்ட இலத்தீன் மொழிப் பொது உண்மை ஒரு கற்பனையான பொது உண்மை என Lord Bernstein of Legit(எதிர்) V.Skyviews and General Lm (1977) 2 ALL England Reports 902,905 இல் குறிப்பிடுகின்றார்.

நிலத்தின் மேற்பரப்பு(Surface) தொடர்பாக நிலச் சொந்தக்காரருக்கு உரிமை உண்டு என்பதை பின்வரும் பந்திகளில் பார்ப்போம்.

முதலாவதாக நிலச் சொந்தக்கரரர் நிலத்தின் மேற்பரப்பிலுள்ள வான்வெளி தொடர்பாக உரிமையுடயராவார்.

நிலச் சொந்தக்காரரானவர் நில மேற்பரப்பிலுள்ள வான்வெளி தொடர்பில் அந்நிலத்தின் சாதாரண பயன்பாட்டுக்கும் அனுபவிப்பதற்கும் தேவையான உயரத்துக்கும் நிலம் தொடர்பாகவும் அந்நிலத்தின் மேலுள்ள கட்டமைப்புக்கள் தொடர்பாகவும் உரித்துடையவராவர்.

ஒரு நிலம் மீதுள்ள வான்வெளி தொடர்பாக நிரந்தரமான தலையீடு (Parliament of interactions) காணி மீது நடத்தப்படும் அத்துமீறிய பிரவேசம் ஆகும்(Trespass).எனினும் ஒரு காணி மீது நியாயமான உயரத்தில் வான்கலங்களில் பறப்பதற்கான உரிமை எவருக்கும் உண்டு.

மேற்குறிப்பிட்ட பந்திகளில் நிலமேற்பரப்பு மீதான நிலச்சொந்தக்காரரின் உரிமைகள் எவை என்பது குறித்து மேலே பார்த்தோம்.

பின்வரும் பந்திகளில் நிலச் சொந்தக்காரர் ஒருவருக்கு நிலத்தின் அடியில் உள்ள உரிமைகள் எவை எனப் பார்ப்போம்.

ஒரு நிலச் சொந்தக்காரர் தமது நிலத்தின் அடியில் உள்ள கனிப்பொருள்கள் தொடர்பில் உரிமையுடையவராவர்.

அடுத்து ஒரு நிலத்தின் சொந்தக்காரருக்கு அந்நிலத்தில் உள்ள பொருந்தங்கள் (Fixtures) தொடர்பில் என்ன உரிமை உண்டு என்பதைப் பார்ப்போம்.

ஒரு நிலத்தின் மீதுள்ள பொருந்தம் நிலச் சொந்தக்காரரின் சொத்தாகும். பொருந்தம் என்பது நிலத்துடன் இணைக்கப்பட்ட தளவாடம் ஆகும்.

ஒரு தளவாடமானது 'பொருந்தம் என்பது' என்ன நோக்கத்துக்காக் நிலத்துடன் பொருத்தப்பட்டது? என்பதில் தங்கியுள்ளது.

இதில் இரண்டு அம்சங்கள் கருத்திற் கொள்ளப்படும். முதலாவது என்ன நோக்கத் துக்காக அந்தத் தளவாடம் பொருத்தப் பட்டது? (Object)

இரண்டாவதாக எந்தளவுக்கு அத்தள வாடம் பொருத்தப்பட்டுள்ளது? என்பதில் தங்கியுள்ளது (degree).

அடுத்து கூட்டுச் சொந்தக்காரர் என்ற சொத்து சம்பந்தமான எண்ணக்கருவினை பார்ப்போம்.

## Co – ownership

இது இரண்டு வகையானது ஆகும். அவையாவன

1. Joint Tenancy
2. Tenancy in Common

முதலாவதாக Joint tenancy என்ற கூட்டுச்சொந்தம் பற்றிய எண்ணக்கருவினைப் பற்றி சிறிது பார்ப்போம்.

### 1.Joint tenany

Joint tenany என்ற எண்ணக்கரு நான்கு ஒருமைப்பாடு (Unity) அம்சங்களைக் கொண்டதாகும். இவை பற்றிப் பார்ப்போம்.

Joint tenancy விலுள்ள முதலாவது ஒருமைப்பாடு (Unity)

Unity of possession

உடைமை சம்பந்தமான ஒருமைப்பாடு

அதாவது ஒவ்வொரு கூட்டுச் சொந்தங்களும் மற்றைய கூட்டுச் சொந்தக்காரரை நீக்கி (Exclude) வைக்க முடியாது

### 2. Unity of interest- நலன்களின் ஒருமைப்பாடு

ஒவ்வொரு சொந்தக்காரரும் சமபங்கு நிலச் சொந்தமாக உள்ளவர் ஆவர். ஒவ்வொரு நலன்களும் தன்மையிலும் காலஎல்லையிலும் ஒருமித்ததானது ஆகும் (Identical).

### 3. Unity of time-காலம் சம்பந்தமான ஒருமைப்பாடு

ஒவ்வொரு காணி உரிமையாளர்களும் நலன்களாலும் ஒரே நிகழ்வாலும் ஒருமைப்பாடுடையவராவார்.

### Unity of title -உரித்தின் ஒருமைப்பாடு

அதாவது ஒவ்வொரு கூட்டுச் சொந்தக்காரரும் அவர்களுடைய உரித்தின் ஒரே சாசனத்தில் இருந்து பெறவேண்டும்.

விடுத்து ஒரு கூட்டுச் சொந்தங்கள் இறப்பாராகில் மற்றைய கூட்டுச் சொந்தக் காரரர் அவருடைய பங்கினைச் சுயமாகவே பெற்றுக்கொள்வார்.

அடுத்தது Tenancy in Common ஆகும்.

Tenancy in Common என்ற எண்ணக்கருவிலுள்ளபடி ஒவ்வொரு கூட்டுச் சொந்தக் காரரும் வெவ்வேறு நலன்களை காணியில் கொண்டிருப்பர்.

ஒவ்வொரு நலன்களுக்கும் ஒவ்வொரு கூட்டுச் சொந்தக்காரரும் சமபங்கு கொண்டிருக்க வேண்டும் என்ற தேவைப்பாடு கிடையாது.

மேலும் ஒரு கூட்டுச் சொந்தக்காரர் இறந்தால் மற்றைய கூட்டுச் சொந்தக்காரர் இறந்த கூட்டுச் சொந்தக்காரரின் பங்குக்கு உரிமை கொண்டாட முடியாது.

# கல்லைத்தான் மண்ணைத்தான் - “தி ராக்ஸ்”

**நெ செ பரத்**

ஒரு மதிய வேளையில் உணவருந்திவிட்டு ‘ஓபரா ஹவுஸ் ‘அருகில் உள்ள Circular Quay பகுதியில் உலா வருகையில், தூரத்தில் ஒரு குழுவிடம் யாரோ பேசிக்கொண்டு இருப்பதைக் கண்டோம். யாரோ வித்தை காட்டுபவர்கள் தான் என்று நினைத்து அருகில் சென்று பார்த்தால், டீ- ஷேர்ட் , ஷோர்ட்ஸ் அணிந்தபடி ஒரு இளைஞர்




ஓபரா ஹவுஸின் வரலாற்று சிறப்பை விளக்கி கொண்டு இருந்தார். அடடே! நாம் மாதந்தோறும் எழுதும் சுற்றுலாக் கட்டுரையில் வருவது போல் இவர் விளக்கி கொண்டு இருக்கிறாரே என்று சிரத்தையுடன் அவர் சொல்வதைக் கேட்டபடி நின்றேன். அது ஒரு இலவச நடைபயணச் சுற்றுலா என்றும், அதில் அவர்கள் சிட்னியின் பல்வேறு முக்கியமான இடங்களை நேரில் சென்று அதன் சிறப்பை அறிகிறார்கள் எனவும் கூட்டத்தில் ஒருவர் சொன்னார். அந்த பிற்பகல் வேளையில் பெரிதாக வேலைப் பளு ஒன்றும் இல்லை என்பதால் நானும் அந்தக்கூட்டத்தில் ஒருவனாக இணைந்து கொண்டேன். அப்படி அவர்களுடன் இணைந்து நான் சென்ற இடம்தான் “தி ராக்ஸ்”. (கல்லைத் தான் மண்ணைத் தான் தலைப்பு இப்போது புரிகிறதா..)

சிட்னியின் மைய வணிக பகுதியில் (CBD) இருந்து சுமார் 1 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது இந்த “தி ராக்ஸ்” பகுதி. மற்ற பகுதிகளோடு ஒப்பிடுகையில் இது மிகவும் சிறிய நிலப்பரப்புத்தான். இதன் பரப்பளவு வெறும் 0.2 ஸ்கொயர் கிலோமீற்றர் மட்டுமே. சிட்னி ஹார்பர் பாலத்தின் தெற்கு வாயில் இந்தப் பகுதியில் தான் அமைந்துள்ளது. இது புகைப்படப் பிரியர்களுக்கான விருந்து எனவும் சொல்லலாம். 1788 இல் நிறுவப்பட்ட இந்தப் பகுதி அந்நாட்களில் பெரும்பாலும் தண்டனைக் கைதிகள் வாழும் இடமாகவே இருந்தது. 1793-இல் இந்த இடத்தை மறுசீரமைப்புச் செய்தது அரசு. இந்தப் பகுதியில் பல்வேறு உணவு விடுதிகள் மிகப் பிரபலம். பழமையின் சாரத்தை இன்றளவும் இந்தப் பகுதியில் உள்ள கட்டடங்களில் நம்மால் காணமுடியும். அங்குள்ள ஒரு அருங்காட்சியகத்தில் நாம் நுழைந்தோம் (நுழைவுக் கட்டணம் இங்கு இல்லை) ஆஸ்திரேலியப் பழங்குடியினர்களின் சுவடுகள் தொடங்கி ஆங்கிலேயக் குடியேற்றம் வரை பல்வேறு விதமான பொருட்கள் இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. “சாம்சன் குடிசை” என்ற ஒரு புராதன கட்டடத்தில் தான் இந்த அருங்காட்சியகம் அமைந்துள்ளது. இந்தக் கட்டடம் சுமார் 160 வருடப் பழமையானது.


அடுத்ததாக நாங்கள் சென்ற இடம் ராக்ஸ் மார்க்கெட் (சந்தை) . சனி மற்றும் ஞாயிறு மட்டும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை இயங்கும் இந்தச் சந்தை மிகவும் பிரபலமான ஒன்றாகும். சிட்னி ஹார்பர் பாலத்திற்கு மிக அருகில் உள்ள சாலையில் அமைக்கப்பட்டுள்ள இந்த வாரச்சந்தையில் பல்வேறு விதமான வேளாண் பொருட்கள், உணவு பொருட்கள், கைவினைப் பொருட்கள் என நம்ம ஊர்உழவர் சந்தை போல் உற்பத்திசெய்பவரே நேரடியாக நுகர்வோரிடம் பொருட்களை விற்பது வரவேற்கத்தக்க ஒன்றாகஇருந்தது.

இந்த ராக்ஸ் பகுதியில் நடந்து செல்வதே ஒரு தனி அனுபவம் தான், பரபரப்பான சிட்னியின் மையப்பகுதிக்கு சற்றும் சம்பந்தம் இல்லாத வகையில் இங்கு மக்களை எப்போதும் ஒரு மகிழ்ச்சியான கேளிக்கைப் பாங்குடன் காண முடிகிறது. என்னைப் போன்ற ஆஸ்திரேலியன் ஹாட் (தொப்பி) விரும்பிகளுக்காகவே இந்தப்பகுதியில்



ஒரு தொப்பிக் கடையும் உண்டு.

அடுத்ததாக நம் கண்ணில் பட்டது ஆஸ்திரேலியாவின் மிகத் தொன்மையான படிக்கட்டுகள், இதற்கு பெயர் “ஆர்கைல் படிகள்”, சுமார் 9 மீற்றர் உயரம் கொண்ட இந்தப் படிகள் ராக்ஸ் பகுதியில் இருந்து மில்லெர்ஸ் பொய்ண்ட் என்ற பகுதிக்கு நம்மைக் கூட்டிச்செல்லக்கூடியவை. இந்தப் பகுதியில் காணப்படும் பல்வேறு கட்டடங்களைப் போல



இந்த ஆர்கைல் படிக்கட்டுகளும் சாண்ட்ஸ்டோன் என கூறப்படும் மணற்கற்களால் ஆனவை. விசைப்பொறி (மோட்டார்) வாகன வசதிகள் இல்லாத காலத்தில் இது போன்ற படிக்கட்டுகள் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டன, குறிப்பாக சாய்வான பகுதிகளில் இவையே மிகவும் உபயோகமானவை.

பெரும்பாலும் பாறைகளால் ஆன பகுதி என்பதால் தி ராக்ஸ் தெருக்களில் பாறைகளை குடைந்து சாலைகள் சமைக்க வேண்டிய தேவை இருந்தது, அப்படி குடைந்தெடுத்த ஒரு பகுதி தான் “ஆர்கைல் கட்”. ஆஸ்திரேலியாவின் பல்வேறு இடங்களைப் போல் இதுவும் தண்டனைப் கைதிகளால் கட்டப்பட்டதாகும். முன்கூறிய மில்லர் பொய்ண்ட் பகுதியை ராக்ஸ் பகுதியோடு இணைக்கவே இந்த ’ஆர்கைல் கட்’ அமைக்கப்பட்டது.

இதற்கு ஆர்கைல் என்ற பெயர் காரணம் எப்படி வந்தது? என்று நான் இன்னும் தேடி கொண்டிருக்கிறேன், சிட்னியின் பல்வேறு இடங்களில் இந்தப் பெயர் தெருக்களுக்கும், பொது -இடங்களுக்கும் சூட்டப்பட்டு உள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது.

“ஒருநாள் போதுமா இன்றொரு நாள் போதுமா” என்ற வரிகளுக்கு ஏற்ப “தி ராக்ஸ்” பகுதியைச் சுற்றிப் பார்க்க ஒரு நாள் போதவே போதாது. பரப்பளவில் சிறிய பகுதியாக இருப்பினும், இங்கு இருக்கும் ஒவ்வொரு சாலைகளும், கட்டடங்களும் வரலாற்றைச் சுமந்து நிற்கின்றன. இந்நாட்களில் பழமையும் நவீனமும் கைகுலுக்கும் இடமான “தி ராக்ஸ்” சிட்னியின் பொக்கிஷம் என்றால் அது மிகையாகாது.

இதுவரை நம்மை வழி நடத்திய இந்த இலவச நடைச் சுற்றுலா நடத்தும் இளைஞருக்கு நன்றி சொல்லி நாம் விடைபெற்றோம்

பயணிக்க இன்னும் பல இடங்கள் இருப்பதால் வாருங்கள் இணைந்து தொடர்ந்து பயணிப்போம்.

**(பயணங்கள் முடிவதில்லை)**






# சீக்கியரின் தனி நாடும் இந்துத்துவ அடியாட்களும்

**மனோகரன் தேவதாசன்**

சர்வதேசச் செய்திகளில் மெல்பேர்ன் நகரம் தொடர்ந்து ஒரு வாரமாகப் பேசப்பட்டு வருகிறது. அப்படி சர்வதேசச் செய்திகளில் மெல்பேர்ன் பேசப்படுவது பெருமிதம் தானே என்று நீங்கள் நினைக்கலாம். ஆம், மெல்பேர்ன் நகரம் தொடர்ந்து பல நல்ல விசயங்களுக்காகப் பாராட்டு பெற்ற ஒரு நகரம் தான், உலகின் பல்வேறு இனத்தவர்கள் கூடி சகோதரத்துவத்துடன் வாழும் ஒரு அற்புதமான நிலம் தான். The most livable city in the world என்கிற பட்டத்தையும், Global Liveability Index 2022 என்கிற குறியீட்டில் 10 ஆவது இடத்தில் தொடர்ந்து தன்னை தக்கவைத்துக் கொண்டு ஒய்யாரமாக நடை போடும் நகரம் தான்.ஓவியம், கலை, கலாசாரம், முதன்மையான பல்கலைக்கழகங்கள் என மெல்பேர்னின் சிறப்புகளை அடுக்கிக் கொண்டே போகலாம். அற்புதமான பொதுப்போக்குவரத்து நிறைந்த, கிரிமினல் குற்றங்கள் மிக அரிதான நகரம், ஏராளமான வேலை வாய்ப்புகளை வழங்கும் நகரம் என இந்த நகரம் தன் மக்களை எப்பொழுதும் மகிழ்ச்சியில் ஆழ்த்தும் நகரம் தான் . ஆனால் அப்படியான விசயங்களுக்காக மெல்பேர்ன் நகரம் கடந்த வாரம் சர்வதேசச் செய்திகளில் பேசப்படவில்லை என்பது தான் வருத்தமளிக்கும் செய்தி.

மெல்பேர்னில் வசிக்கும் இந்திய வம்சாவளியான சீக்கியர்கள் மெல்பேர்னில் உள்ள மூன்று இந்துக் கோவில்களின் சுவர்களில் வன்மையான வார்த்தைகளை எழுதி அது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவின் பஞ்சாப்பில் எதையேனும் செய்து அங்கே ஆட்சிக்கு வர பாரதிய ஜனதாக் கட்சி முயற்சித்தது. ஆனால் அதற்குத் தொடர் தோல்விகளே மிஞ்சின. உலகையே உலுக்கிய இந்தியாவின் விவசாயப் போராட்டம் இதே பஞ்சாப்பில் இருந்து புறப்பட்ட சீக்கியர்களின் பெரும் மனத் திண்மத்தின் வெளிப்பாடே என்றால் மிகையில்லை. சீக்கியர்கள் அத்தகைய கடும் உறுதிபெற்றவர்கள், வரலாறு நெடுகிலும் போர்களைச் சந்தித்த ஒரு இனக்குழுவாகவே அவர்கள் திகழ்கிறார்கள். இந்தியப் பிரிவினையின் போது நிகழ்ந்த பெரும் கலவரங்கள் தொடங்கி காலிஸ்தான் பிரிவினை, பொற்கோவில் மீது இராணுவத் தாக்குதல்கள் எனத் தொடர்ந்து ஏதோ ஒரு வகையில் அவர்கள் வன்முறைக்கு ஆளாகிவருகிறார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ் மற்றும் அதன் இந்து மத அமைப்புகள் எப்பொழுதும் சீக்கியத்தை ஒரு தனித்த மதமா-கப் பார்ப்பதில்லை. இதனால் தொடர்ந்து சீக்கியம் இந்துமதத்தின் ஒரு பகுதியே என்கிற தொனியில் பேசி வருவதும் அவர்கள் மத்தியில் பெரும் மனக்குமுறலை ஏற்படுத்தி வருகிறது. புது டில்லியில் ஒரு வருடத்துக்கும் மேலாக நடைபெற்ற விவசாயப் போராட்டங்களில் பங்கேற்ற சீக்கியர்களை , பா.ஜ.க. வின் தலைமை காலிஸ்தான் தீவிரவாதிகள் என்று அழைத்தும் வந்தது. இப்படி தொடர்ச்சியாக இந்துத்துவவாதிகள் இந்தியாவில் இருக்கும் மதச்சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள்,சீக்கியர்களை ஏளனம் செய்வது, அவமானப் படுத்துவது, அவர்கள் மீது தாக்குதல்களைத் தொடுப்பது என, தமக்கு எதிரானவர்கள் அனைவரையுமே இதே பாணியில் இகழ்ந்து வருவது தொடர்கதையே.

இந்தச் சூழலில்தான் கடந்த இரு வாரங்கள் முன்பு இந்தியப் பிரதமர் மோடி, பஞ்சாப்புக்குச் சென்ற போது மீண்டும் சீக்கியர்களை காலிஸ்தான் தீவிரவாதிகள், இந்தியத் தேசத்துக்கு இவர்களிடம் இருந்து பெரும் ஆபத்து காத்திருக்கிறது, பஞ்சாப்பில் உள்ள சிறைத்துறையை உடனடியாக மேம்படுத்த வேண்டும், அவர்களின் பணப்போக்குவரத்தைக் கண்காணிக்க வேண்டும், எல்லை வழியே ஆயுதங்கள் ஊடுருவுகிறதா என்பதைச் சோதிக்க வேண்டும் என்கிற ரீதியில் பேசியிருப்பது அவர்கள் மத்தியில் பெரும் மனக்குமுறலை ஏற்படுத்தியிருக்கிறது. அதற்காக மெல்பேர்னில் இருக்கும் இந்தியத் தூரதரம் முன்பு சென்று அவர்கள் போராடியிருக்கலாம். ஆனால் இப்படி இந்துக் கோவில்களின் சுவர்களில் இழிவான சொற்களை எழுதியமைதால் சீக்கியர்கள் பக்கமுள்ள நியாயம் அடிபட்டுபோகவே வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தின் வழியே சர்வதேசச் செய்திகள் அடிபட தொடங்கிய மெல்பேர்ன் நகரத்தில் ,அடுத்த வாரத்தில் காலிஸ்தான் என்கிற தனிநாடு வேண்டும் என்கிற மக்கள் வாக்கெடுப்பை சீக்கியர்கள் நிகழ்த்தினார்கள். பஞ்சாப் மற்றும் உத்திரப்பிரதேசம், உத்தார்கண்டு மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களின் சில பகுதிகளை பஞ்சாப்புடன் இணைத்து ஒரு தனி மாநிலத்தை அவர்கள் கோரினார்கள். வாக்கெடுப்புக்காக பெரும் திரளான சீக்கியர்கள் மெல்பேர்ன் முழுவதில் இருந்தும் கான்பெடரேசன் சதுக்கம் நோக்கி வந்தார்கள், பெரும் வரிசைகளில் நின்று வாக்களிக்கக் காத்திருந்தார்கள். அந்த நேரம் மாலை 4.30 மணிக்கு இதற்கு எதிராக முழக்கங்கள் எழுப்பியபடி இந்தியத் தேசியக் கொடியுடன் ஆர்.எஸ்.எஸ் மற்றும் பா.ஜ.க. கட்சியினரின் ஒரு கூட்டம் அங்கே குழுமியது. பெரியதொரு தடியில் இந்தியத் தேசியக் கொடியைக் கட்டிக் கொண்டு ஒருவர் , அங்கே இருக்கும் சீக்கிய இளைஞனைத் தாக்கும் காணொலி ஒன்று வைரல் ஆனது.இந்தச் செய்திகள் உடனேயே தீபோல பரவ , சிறிது நேரத்திற்குள் அங்கே இரு குழுக்களிடையேயும் பெரும் வன்முறை மூண்டது. காவல்துறையினர் மிளகு ஸ்பேரே தெளித்துத் தான் கூட்டத்தினரைக் கலைந்து போகச் செய்தார்கள். பலர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். ப்ளின்டர்ஸ் ரயில் நிலையம் அருகிலும் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன. இரு பக்கங்களிலும் சிலர் கைது செய்யப்பட்டார்கள்.

வரலாறு நெடுகிலும் சீக்கியர்கள் வன்முறையைச் சந்தித்ததால், அவர்கள் தொடர்ந்து நாடு கடந்து வாழும் சூழலுக்குத் தள்ளப்பட்டார்கள். இந்தியாவில் இருந்து அவர்கள் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து , ஆஸ்திரேலியா வரை குடிப்பெயர்வில் ஈடுபட்டார்கள். ஆஸ்திரேலியாவில் மட்டும் மூன்று லட்சம் சீக்கியர்கள் வசிக்கிறார்கள் என்றால் உங்களால் அவர்களின் துயரை யூகிக்க இயலும் என்று நினைக்கிறேன்.

இந்தச் சம்வங்கள் குறித்து அறிந்துகொள்ளும் போது இதே பாணியில் இலங்கைத் தமிழர்களின் தனி நாட்டுக் கோரிக்கைக்கான வாக்கெடுப்பு, பெரும் வாகனப் பேரணி கள் மெல்பேர்னில் நடைபெற்ற போது சிங்களவர்கள் வந்து தமிழர்களைத் தாக்கியமை, வாகனங்களைச் சேதப்படுத்தியதை நினைவில் வருவதைத் தடுக்க இயலவில்லை அந்தச் சம்பவங்களுக்கும் கடந்த வாரம் சீக்கியர்கள் வாக்கெடுப்பின் போது கலவரம் செய்த சம்பவத்துக்கும் ஒரு தொடர்பு இருக்கிறதை என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். மெல்பேர்னில் இருக்கும் ஒரு பத்திரிகையாளருடன் பேசிக் கொண்டிருக்கும் போது அவர் போகிற போக்கில் ஒரு உண்மையை எடுத்துரைத்தார், இந்த இரு சம்பவங்களுக்கும் அந்த நாட்டுத் தூதரகங்களுக்கு நேரடித் தொடர்பு இருக்கிறது என்றார். அன்றைக்கு இலங்கைத் தூதரகம் தான் கலவரக்காரர்களைத் திட்டமிட்டு அனுப்பியது . அதேபோல இந்த முறை இந்தியத் தூதரகம் தான் இந்துத்துவ அடியாட்களைச் சீக்கியர் களின் வாக்கெடுப்பு மையத்தை நோக்கி அனுப்பியது என்றார். நிச்சயம் தூதரகங்கள் இவற்றை எல்லாம் முற்றாக மறுக்கும் தான், ஆனால் தூதரகங்கள் இப்படியான வேலைகளில் ஈடுபடுமெனில் அது ஜனநாயகத்திற்கும் , ராஜாங்க உறவுகளுக்கும் பெரும் கேடின்றி வேறில்லை.

ஆஸ்திரேலியாவில் எந்த நாட்டவரும் வசிக்கலாம் , ஆனால் குடியுரிமை பெற்ற ஆஸ்திரேலியா குடிமக்களாக தங்களை அறிவித்துக் கொண்ட பிறகு அவர்கள் தங்களின் வாழ்வில் ஒரு ஜனநாயகப் பண்பை ஏற்க வேண்டும். அவர்களுக்கு ஆஸ்திரேலியா நிலமும், அரசியல் அமைப்பும்,போராடும் உரிமையையும் வழங்குகிறது, வாக்கெடுப்பை நடத்தும் உரிமையை, வெளிப்பாட்டுக் கருத்துரிமையை வழங்குகிறது . ஆனால் கலவரம் செய்யும் உரிமையை, வன்முறையில் ஈடுபடும் உரிமை யைக் கொடுக்கவில்லை என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அமைதி பூங்காவாகத் திகழும் ஒரு தேசத்துக்கு இத்தகைய செயல்கள் பெரும் அவமானத்தையும் தலை குனிவையுமே ஏற்படுத்தவல்லன.

இந்தியாவில் தொடர்ச்சியாக தேவாலயங்களை, மசூதிகளை இடிப்பதும், மாட்டிறைச்சியை முன்வைத்து பலரைக் கொலை செய்வதையும் இந்துத்துவ வெறியர்கள் வாடிக்கையாக வைத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந்துத்துவ வாதிகள் உலகம் முழுவதும் தங்களின் அரசியல் தலையீட்டை நிகழ்த்தி வருகிறார்கள். இலங்கையில் கடந்து சில ஆண்டுகளாகப் பேசப்பட்டு வரும் மாட்டிறைச்சி அரசியல் என்பது கூட இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தத்துவம் தான் என்பதை நாம் நினைவில் கொள்வது அவசியம்.

2022 செப்ரெம்பரில் ஒரு இஸ்லாமிய இளைஞனை லண்டனில் லெய்செஸ்டர் வீதியில் வைத்து இந்துத் துவாவினர் அடித்துக் காயப்படுத்தினார்கள், 2021இல் ஒரு சீக்கியப் பள்ளியின் சுவர்களில் சீக்கியர்களுக்கு எதிரான வாசகங்களை எழுதி, ஸ்வஸ்திக் குறியீட்டை இந்து அமைப்பினர் வரைந்தார்கள். ஆஸ்திரேலியாவில் விசால் ஷூத் என்பவர் தொடர்ந்து சீக்கியர்களைத் தாக்கி அதன் காரணமாக நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட சம்பவத்தையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். மெல்பேர்ன் பல்கலைக்கழகத்தின் ஆஸ்திரேலியா-இந்தியா இன்ஸ்டிட்யூட்டில் இருந்து 13 பேராசிரியர்கள் ஏன் ராஜினாமா செய்தார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள். அவர்கள் சொன்ன காரணம் ஒன்றே, இந்தியத் தூதரகம் எங்கள் கல்விப்புல விவகாரங்களில் தொடர்ந்து தலை யிடுகிறது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததே நாங்கள் ராஜினாமா செய்கிறோம் என்றார்கள்.

இதன்மூலம், ஒன்றை நாம் முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்று விருப்பப்பட்டால் நாம் அதன் வரலாற்றை, இதற்கு முந்தைய நிகழ்வுகளை, உலகம் முழுவதும் இதே சம்பவத்தின் தொடர்புடைய போக்குகள் அறியாமல் எதையும் விளங்கிக்கொள்ள இயலாது.

# சட்டம் என்ற இருட்டறையில்...!

சியாமளா யோகேஸ்வரன்

வத்திக்கானைத் தலைமையிடமாகக் கொண்டு செயற்படுகிற கத்தோலிக்கத் திருச்சபையின் மூன்றாவது உயர்ந்த அதிகாரத்தில் இருந்தவரான கர்டினல் ஜோர்ஜ் பெல் கடந்த 11.01.2023 அன்று மரணமடைந்திருந்தார்.

ஒரு மதகுருவாக அனைவராலும் மதிக்கப்பட வேண்டிய உயர் பீடத்தில் இருந்தவரின் இறப்பானது கத்தோலிக்க மக்களால் மட்டுமல்லாமல் அனைத்து மதமக்களாலும் அஞ்சலிக்குரியதாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அவரைப் பற்றிய பல்வேறுபட்ட முரண்பாடான கருத்துக்களும், கலவையான உணர்வலைகளும் வெளி வந்து கொண்டிருப்பதன் பின்னணிதான் என்ன?

விக்டோரிய மாநிலத்தின் பல்லாரட்டில் 1941 ஆம் ஆண்டு பிறந்த இவர், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் மேற்கல்வியை முடித்திருந்தார். பல்லாரட்டில் இருந்த கத்தோலிக்கத் தேவாலயம் ஒன்றில் 1973 க்கும் 1983 க்கும் இடைப்பட்ட காலத்தில் முக்கியமான தலைமைப் பொறுப்பை வகித்த இவர் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மெல்பேனிலும், 2001 இல் சிட்னியிலும் பாதிரியாராக இருந்து, பின்னர் வத்திக்கானில் மதிப்பிற்குரிய கர்டினல் என்ற உயர் நிலையை அடைந்தார்.

கர்டினல் பெல், இடுப்பு மாற்றீட்டுக்கான சத்திரசிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த போது ஏற்பட்ட சில உடல் நலச்சிக்கல்களினால் மாரடைப்பு ஏற்பட்டு தனது 81ஆவது வயதில் மரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளார்.

கர்டினல் பெல் கத்தோலிக்கத்தில் தீவிர நம்பிக்கை கொண்டவராகவும், பழமைவாத நம்பிக்கைகளை அப்படியே பின்பற்றி அவற்றை ஆதரித்து வந்தவராகவும், கத்தோலிக்கர்களின் பெருமதிப்பிற்குரியவராகவும் இருந்திருக்கின்றார். கருக்கலைப்பு, ஓரினத் திருமணம், கருத்தடை முறைமைகள் போன்றவை இவரால் கடுமையாகச் சாடப்பட்டு வந்திருக்கின்றன. சீனா மற்றும் ரஷ்யாவின் ஆக்கிரமிப்புகள் அரசியல் ரீதியாக அங்கீகரிக்கப்பட்டாலும், கல்லறைகள் கட்டி எழுப்பப்படுகின்றன என்று பார்க்கும் போது, வரப்போகும் புதிய போப்பாண்டவரால் அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று இப்போதிருக்கும் போப்பாண்டவர் மீது குறை கூறுவது போன்றதான கருத்துக்களையும் முன் வைத்துள்ளார்.

இத்தாலியிலுள்ள சென்.பீற்றர்ஸ் பசிலிக்கா தேவாலயத்தில் வணக்கத்துக்குரிய போப் உட்பட கத்தோலிக்க மதகுருக்களால் இறுதி அஞ்சலிகள் நிகழ்த்தப்பட்டு, சிட்னியில் அவரது இறுதிச்சடங்குகள் நிகழ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வத்திக்கான் பொருளாளராகவும், திருச்சபையில் ஒரு முக்கியமான ஆலோசகராகவும், அவுஸ்திரேலியாவைப் பிரதிநிதிப்படுத்தி கத்தோலிக்க சபையின் உயர் பீடத்தில் இருந்தவருமான இவருக்கு விக்டோரிய மற்றும் சிட்னி மாநில அரசுகள் இவரது மரணச் சடங்கினைச் செய்வதற்கு மறுப்புத் தெரிவித்திருக்கின்றன. இன்னமும் நியாயத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கும் பாதிக்கப்பட்டவர்களின் மனதை தாம் நோகடிக்க விரும்பவில்லை என்ற ஒரு காரணத்தையும் மாநில முதல்வர்கள் முன்வைத்துள்ளார்கள்.

2017 இல் வத்திக்கான் கத்தோலிக்க சபையின் பொருளாளராக இருந்த இவரின் மீது பாலியல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டார். 1990 களில் ஆஸ்திரேலியா, மெல்பேன் நகரில் உள்ள செயிண்ட் பாட்ரிக் தேவாலயத்தில் கர்டினால் பெல் பணியாற்றிய போது, தேவாலயத்தின் இசைக்குழுவைச் சேர்ந்த பாடகர் குழுவிலிருந்த சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. ஆயினும், ஒன்றரை ஆண்டு காலத் தண்டனைக் காலத்தின் பின்னர், உயர் நீதிமன்றத்தில் மீள்மனுச் செய்யப்பட்டது. அங்கு நடந்த விசாரணைகளில் குற்றத்தை நிரூபிக்க முடியாமையால், கர்டினல் பெல் விடுதலையாகி மறுபடியும் வத்திக்கானைச் சென்று சேர்ந்திருந்தார். அவரது சிறைத்தண்டனை சம்பந்தமாக வத்திக்கான் தேவையான எந்த நடவடிக்கைகளும் எடுக்காமல் மௌனமாகவே இருந்தது என்றும் கூறப்படுகின்றது. அத்துடன் முன்பு வகித்தது போன்றதான உயர்பதவிகள் எதுவும் வத்திக்கானால் மீண்டும் அவருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

அவரின் மீதான குற்றச்சாட்டுகள் அத்துடன் நின்று விடவில்லை. 1996 இல் மெல்பேனில் ஆக்கிபிஷொப்பாக இருந்த போது, தேவாலயத்துப் பாதிரியார்கள் சிலரால் அங்கிருந்த சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதை அறிந்தும் கூட கர்டினல் பெல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றார்.

பத்து வயதுக்கும் குறைந்த இன்னமும் குழந்தைத்தனம் மாறாத கள்ளங்கபடமற்ற அப்பாவிக்குழந்தைகளைக் காப்பாற்றாமல், பாலியல் எண்ணங்கொண்ட வல்லூறுகளைக் காப்பாற்றுவதில் பெல் முனைந்திருந்தார் என்று இந்தப் பாலியல் துஷ்பிரயோக சம்பவத்தால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் குமுறியிருந்தார். அந்தச் சிறுவர்கள் அதிர்ஷ்டவசமாக இன்னமும் உயிருடன் இருக்கிறார்களே தவிர, அவர்களின் மனதில் வெளியில் சொல்ல முடியாத வலிகளும், அவமானங்களும், குற்ற உணர்ச்சியும் மாறா வடுவாகப் பதிந்திருப்பதால், அவர்களால் மற்றையவர்களைப் போல் நிம்மதியான வாழ்க்கையை வாழ முடியவில்லை என்று பாதிக்கப்பட்ட அந்தப் பெண் குறிப்பிடும் போது மாநில முதல்வர்களின் தீர்மானத்தில் நியாயம் இருக்கிறதாகவே தோன்றுகின்றது. இந்தச் சம்பவத்தால் வேறும் சிலர் பாதிக்கப்பட்டிருக்கக் கூடும் என்றும், விசாரணையை முன்னெடுப்பதற்கு முறைப்பாடுகள் வேறெதுவும் கிடைக்கவில்லை என்ற உண்மை வேதனையைத் தருவதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் கூறியிருந்தார்கள். பாதிக்கப்பட்ட இருவர் ஏற்கனவே மரணமடைந்து விட்டனர் என்ற செய்தியின் பின்னணியில் சட்டத்தின் முன்னால் குற்றப்பத்திரிகை வருவதற்கு நீண்ட காலம் எடுத்துக் கொண்டுள்ளது என்றே நினைக்கத் தோன்றுகின்றது.




தொடர்ந்து அந்தப் பெண் 'கர்டினல் பெல்லின் மரணத்தால் தாம் ஒன்றும் துள்ளிக் குதித்து ஆனந்தக் கூத்தாடப் போவதில்லை. இந்த மரணம் தமக்குத் தேவையான நீதியைப் பெற்றுத் தந்துவிடவில்லை' என்றும் கூறியிருக்கிறார்.

தன் மீதான குற்றச்சாட்டுகளை எப்போதும் நிராகரித்து வந்துள்ள பெல், "நான் அப்பாவி. என் மீதான குற்றச்சாட்டுகள் தவறானவை. பாலியல் துஷ்பிரயோகம் என்ற செயல், அருவருப்பானது" என்றே கூறி வந்துள்ளார். அந்த வகையில் கர்டினல் பெல் மீதும் நியாயமற்ற குற்றச்சாட்டுக்கள் வைக்கப்பட்டிருந்திருக்கலாம். நீதி கொடுத்த தண்டனையை மதித்து மனவேதனையுடன் அதை அவர் ஏற்றுக் கொண்டிருக்கலாம்.

உயர்பதவிகளில்இருப்பவர்கள்அப்பாவியாகஇருந்தபோதிலும் அவ்வப்போது சர்ச்சைகளிலும் குற்றச்சாட்டுகளிலும் சிக்குண்டு தண்டனையை அனுபவித்து வந்திருக்கின்றார்கள் என்பது வரலாறு. சாட்சிகள் சரியாக இல்லாத காரணத்தால் குற்றவாளிகள் நீதியின் கரங்களில் இருந்து தப்பித்த சம்பவங்களும் இருக்கின்றன. இறந்தவருடன் சேர்த்து அவருக்கான உண்மைகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கான உண்மைகளும் கூட உறங்கிப் போய் விடக் கூடும். சத்தியம் எதுவாயினும் சட்டம் என்ற இருட்டறையில் சாட்சி என்ற ஒளி இல்லாத வரையில் மனசாட்சி மட்டும் அவரவரை ஊசியாக உறுத்திக் கொண்டிருந்திருக்கும் என்பது மட்டும் நிஜம்.

# இலங்கை கால்பந்து: சூழ்ச்சியும் ஊழலும் நிழல்யுத்தமும்!

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

1. (2022, செப்ரெம்பர் 22 அமுல்படுத்தப்பட்ட) சம்மேளனத்தின் புதிய சட்ட விதிகளை ஏற்றுக் கொள்வதாகவும், இலங்கை கால்பந்துக்கு வழங்கப்பட்டுள்ள தற்போதைய தேசிய விளையாட்டு சட்டவிதிகளை இலங்கை கால்பந்தில் உள்வாங்குவதில்லை என்றும் எழுத்து மூலம் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்க வேண்டும்.

2. கடந்த ஜனவரி மாதம் 14 ஆம் திகதி இடம்பெற்ற இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கான பொதுத் தேர்தலை FIFA மற்றும் AFC ஆகியன ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவொன்று தெரிவு செய்யப்படும்வரை இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் நிர்வாகமே (முன்னாள் தலைவர் ஜஸ்வர் தலைமையிலான நிர்வாகம்) அதன் நாளாந்தச் செயற்பாடுகளைப் பொறுப்பேற்க வேண்டும்.

3. இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கான புதிய பொதுத் தேர்தலானது (2022, செப்ரெம்பர் 22 அமுல்படுத்தப்பட்ட) சம்மேளனத்தின் புதிய சட்ட விதிகளுக்கு அமைய இடம்பெற வேண்டும். குறித்த தேர்தல் இரகசியவாக்கெடுப்பு மூலம் இருக்க வேண்டும் என்பதுடன் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் நிர்வாகக் காலம் 4 வருடங்களாக இருக்கும்.

என அந்த நிபந்தனைகள் இலங்கையின் கட்டுப்பாடற்ற அழுகுணி ஆட்டத்துக்கு ஆப்பு வைத்துள்ளன.

இதன் மூலம் முன்பு அரசியலில் ஸ்ரீரங்கா எவ்வாறு அதிகாரத்தரப்பால் பயன்படுத்தப்பட்டுவிட்டு தூக்கியெறியப்பட்டாரோ அதேபோன்று பயங்கர ஊழலும் நிழல் யுத்தமும் நிறைந்த இலங்கை கால்பந்தாட்டத்தின் வியூகத்திலும் பகடையாக்கப்பட்டு கழற்றிவிடப்பட்டிருக்கிறார்.

அதல பாதாளத்தில் கிடக்கும் இலங்கை கால்பந்துக்கு உய்வு எப்போது என்பதையே ரசிகர்கள் அங்கலாய்ப்போடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

# திக் நியத் ஹான்

ஜென் ஞானி திக் நியத் ஹான் மறைந்து ஒரு வருடம் நிறைவடைகிறது. இது போன்ற ஞானியரின் மறைவை நினைவு கூர்வது வருத்தமான ஒரு நிகழ்வாக இருப்பதில்லை, மாறாக இது அவரை அணுக்கமாக நினைவு கூரும் தருணமாகவே அமைந்துவிடுகிறது. திக் நியத் ஹான், உலகம் முழுதும் பரவலாக அறியப்பட்ட ஜென் மாஸ்டர், வியட்நாமில் பிறந்தவர். இவரை நீங்கள் நேரடியாகக் கேள்விப்பட்டிருக்காவிட்டாலும் இவரின் எளிமையும் தெளிவும் பொதிந்த வாசகங்களை நீங்கள் எங்காவது பார்க்கவோ கேட்கவோ செய்திருக்கலாம். ஆன்மீகத் தளத்தில் மட்டும் தன்னை சுருக்கிக்கொள்ளாமல்



சமூகத்தில் அமைதிப் போக்கிற்கான தேவையை முன்வைத்து தொடர்ந்து பேசி வந்தவர்.


1926இல் பிறந்த திக் நியத் ஹான், பதினாறு வயதிலே-யே பௌத்த மடலாயம் ஒன்றில் சேர்ந்து துறவறம் பெற்றுக்கொள்கிறார். அவரின் பெயரில் உள்ள திக் (Thich) என்பது புத்தரின் குலத்தில் வந்தவர் என்பதைச் சுட்டும் வார்த்தை. 1960 களில் வியட்நாம் போர் உச்சத்தில் இருந்த சமயம் இவரின் போருக்கு எதிரான கருத்துக்களினால் வியட்நாம் அரசு இவரை மீண்டும் வியட்நாமுக்குள் நுழைய அனுமதி மறுத்தது ( அப்போது பிரான்சில் இருந்தார்). அதன் பிறகான தனது பெரும்பாலான நாட்களை அமெரிக்காவிலும் பிரான்சிலும் அவர் கழித்தார்.

அமெரிக்க கறுப்பினத் தலைவரான மார்ட்டின் லூதத் கிங் அவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர். வியட்நாம் யுத்தத்திற்கு எதிராக அமெரிக்காவில் எழுந்த எதிர்ப்பின் ஆரம்பப் புள்ளி திக் நியத் ஹான் அவர்களில் இருந்து ஆரம்பித்தது எனலாம். அதை மார்ட்டின் லூதர் கிங் மேலும் முன்னெடுத்துச் சென்றார். திக் நியத் ஹான் இறுதிவரை தொடர்ந்து எல்லா விதமான போர்களுக்கும், வன்முறைக்கும் எதிராகவே பேசிவந்திருக்கிறார்

திக் நியத் ஹான் எனக்கு முதலில் அவரின் புகைப்படத்தின் மூலமே அறிமுகமானார். சில வருடங்களுக்கு என் மனைவி பணி நிமித்தமாக கலந்துகொண்டிருந்த கருத்தரங்கு ஒன்றில் மனநலம் குறித்த ஒரு விவாதத்தில் ‘இக்கணத்தில் இருத்தல்’ (mindufulness ) என்ற அணுகுமுறையை விளக்கும் விதமாக திக் நியத் ஹான் அவர்களின் சிந்தனைகளும் புத்தகங்களும் முன் வைத்து விவாதிக்கப்பட்டிருக்கிறது.

கருத்தரங்கில் இருந்து அவர் வாங்கி வந்த புத்தகத்தில் இருந்த திக் நியத் ஹானின் புகைப்படத்தை பார்த்ததுமே எனக்கு இயல்பாகவே ஒரு ஈர்ப்பு உருவாகியது .அவர் முகத்தின் தெரிந்தது ஒரு புன்னகை என்று கூட சொல்லிவிட முடியாது .அதை ஒரு நிறைவு என்று வேண்டுமானால் சொல்லலாம், மேலதிகமாக வேறெதுவும் தேவையிருக்காத ஒரு பூரணம்.

அதன் பின் அவரை வாசிக்க ஆரம்பித்த போது அவரின் இருப்புக்கும் அவர் சொல்வதற்கும் இடையே வித்தியாசமே இல்லை என்பதை உணர முடிந்தது . பின்னர் அவரின் உரைகளையும் கேட்டேன் - அந்த ஒருமை உணர்வு முழுமை அடைந்தது . சில விஷயங்களை அறிதல்களாக ஆலோசனைகளாக, வழிகாட்டல்களாக ஒருவர் முன்வைப்பது பொதுவானதே. ஆனால் அந்த தன்மையில் ‘இருந்து கொண்டே’ அதை ஒருவர் அதைச் சொல்வது என்பது



நம்மை அந்தரங்கமாகத் தொடுவது நறுமணத்தை பற்றி ஒரு மலர் பேசுவது போன்றதாக இருந்தது.

மகிழ்ச்சி என்பது எதிலிருந்தோ ,எதன் மூலமாக-வோ , எதை அடைந்தோ பெறும் ஒன்றல்ல . மகிழ்ச்சி ஆனந்தத்தில் (joy ) இருந்து தான் துவங்குகிறது , இதில் இருந்தே பிற விஷயங்கள் கிளைக்கின்றன என்கிறார். Mindfulness practice எனப்படும் ‘இக்கணத்தில் இருத்தல்’ என்பது எதனோடும் பிணைத்துக்கொள்ளாத , எதையும் நிபந்தனையாக்கிக்கொள்ளாத “அடிப்படையான மகிழ்ந்திருக்கும் நிலையை” அடைவதே என்கிறார் . மனதும் உடம்பும் இக்கணத்தில் இங்கு இருக்கும்போது, அதை நாம் கவனிக்கும் போது, நமக்குள் நாம் குவியும் போது, வாழ்வெனும் மலர் இயல்பாகவே நமக்குள் மலர ஆரம்பிக்கிறது. உயிர்த்திருத்தல் என்பதே ஒரு அற்புதமாகிறது. மகிழ்ந்திருக்க அல்லது ஆனந்தித்திருக்க தேவையான அத்தனை சாத்தியங்களும் அந்தந்த கணத்திலேயே பொதிந்துள்ளன என்பதை அறியும் தருணமது .



கார்த்திக்வேலு

இக்கணம் என்பது நிறையும் போது, நிறைந்து ததும்பும்போது, மனதுக்கு எங்கோ, எதுவோ என்று பரபரக்கும் உணர்வுக்கான தேவை எழுவதில்லை. கடந்த காலம் குறித்த ஏக்கங்களோ, எதிர்காலம் குறித்த பயங்களோ, நிகழ்காலம் குறித்த போதாமைகளோ நம்முள் படர்ந்து நம்மைத் திணறடிப்பதில்லை. இப்படிக் குவிந்த ஒரு புள்ளியில் உருவாகும் தெளிவு ஞானத்தின் முதற்படியாகிறது .

இந்தத் தெளிவு உருவாக்கும் மனவிரிவைக் கொண்டே நாம் மற்றவர்களைப் புரிந்துகொள்ளவும் அன்பு செய்யவும் முடியும் என்கிறார். அதிலிருந்தே பிறர் மீதான முற்றான compassion பிறக்கும் என்கிறார் . நம்மை நாம் அன்பு செய்யாமல் பிறர் மீது அன்பு செலுத்த முடியாது .அந்த புள்ளியிலேயே நீ அல்லது நான் என்றும் பிரிவும் மறைய ஆரம்பிக்கிறது. இந்த இடத்தில் நான் வள்ளலாரையும் நினைவுறுத்திக்கொண்டேன். இந்த மனநிலை தான் ‘வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்’ என்று சொல்லும் இல்லையா ?

திக் நியத் ஹான் அடிக்கடி சொல்லும் வார்த்தை ஒன்று உண்டு ‘Bring your mind home> to your body ‘ என்று .இதுவே ஆரம்பம், இதுவே பயிற்சி, இங்கிருந்தே அனைத்தும் ஆரம்பிக்கிறது.எங்கெங்கோ ஏதேதிலோ விரவிப் படர்ந்து தன்னை நூறாக பெருக்கிக்கொண்டு இன்னலுறும் மனதை நம்முள் இங்கே, இக்கணம் இவ்விதம் என்று இருத்திக்கொள்ளும் அணுகுமுறை.

ஞானியர் மரணம் என்றுமே வருத்தம் அளிப்பதல்ல. அவர்களுடனான நம் தொடர்பு என்றைக்குமானது (eternal). அவர்கள் உணர்த்தும் விஷயங்களும் என்றைக்குமானவை. மரணம் என்ற சுழற்சியை வெகு இயல்பாக கடந்து செல்லும் வாழ்க்கையை அவர்கள் முன்னரே அமைத்துக்கொண்டு விடுகிறார்கள். இது போன்ற தருணங்கள் நாம் அவர்களை நினைவுகூரவும், அவர்கள் அளித்துச்சென்ற ஞானத்தையும் நெருங்கி உணரவும் இன்னுமொரு வாய்ப்பு.



LEGAL STUDIES TUITION
YEAR 11 AND YEAR 12
BY VICTORIAN SOLICITOR
FOR FURTHER DETAILS
PLEASE CONTACT:
0405982583
or
Email: nag418662@gmail.com



தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# புயலுக்குப்பின்...

ஊழிக்காலம்-2
41



எல்லோருடைய சுமைகளையும் சுமக்க குழாய்க் கிணற்றடியில் பிள்ளையார் இருந்தார். முன்னர் மக்கள் இங்கு குடியிருந்தபோது கட்டிய கோவிலாம் இது. விக்கிரகம் இல்லை. ஒரு நீள் வட்டமான ’போளைக்கல்’ பீடத்திலிருந்து விநாயகராக அருள்பாலித்தார். இவருக்கென பொங்கல் இடையிடையே நடக்கும் அதற்கென நிதி தானாகவே சேரும். அதை பவுசர்க்காரரிடம் கொடுத்து மாவாக்கி வைத்து அவ்வப்போது மோதகமும் அவிப்பதுண்டு. இம்முறை கோவிலுக்கென மூவாயிரத்து ஐநூறு ரூபா சேர்ந்திருந்தது. பார்வதியிடம் விடுதலையாகிப் போனவர்கள் கொடுத்த ஆயிரத்து ஐந்நூறு ரூபா இருந்தது. அவள் அதையும் கோவிலுக்காக அரிசிமா எட்டுக் கிலோ வாங்க நித்தியாவிடம் கொடுத்து வைத்திருந்தாள். காரணம் வைத்திய சாலை செல்வோரை பதிவு செய்வது அவள்தான். வைத்தியசாலை செல்வோரே பொருட்களை வாங்கி வருவதும் - வாங்குவதும் வழக்கம்.

பங்குனித் திங்களில் ஒரு பெரிய பொங்கல் செய்தபின் எஞ்சிய பணமே அது, ஆனால் கோவிலுக்கென சேர்ந்த அந்தப்பணத்தை, “லீடர் கேட்டாள். கொடுத்துவிட்டேன்” என்றாள் நித்தியா. இந்தப் பணத்துக்கான கணக்கு இந்து மதப்பிள்ளைகளுக்கு சொல்லியே ஆகவேண்டும். லீடர் ரோஸா கிறிஸ்வதப் பெண் , அவளிடம் இது பற்றிக் கேட்டால் தேவைக்குதான் எடுத்தேன் என்றாள். பார்வதிக்கு பயங்கரமான கோபம்,

கோவிலுக்கென்று கொடுத்த பணத்தை எப்படி வேறு செலவு பார்க்கலாம்? பணம் மட்டுமல்ல மோதகத்துக்கு வைத்திருந்த மாவையும் கூட வேறு தேவைக்கு எடுத்தாயிற்று என்றாள். பிள்ளைகள் செய்தி கேள்வியுற்றுக் கொதித்தார்கள்.

“ அதெப்படி, அவள் வேதக்காறி எங்கட காசை வாங்குவா?”

“ ச்சா.. அவ்வளவு காசில்ல .அன்ரீ சும்மா சொல்லுறா..” என்றாள் நித்தியா.

“ ஏய்.. வா.. பிள்ளையாரடியில சத்தியம் பண்ணு” என்றாள் ஒருத்தி.

“ச்சீ வேண்டாம். அது பிள்ளையாற்ற காசு தானே பிள்ளையாரே வாங்கட்டும்” என்றாள் பார்வதி. அப்படி சொன்னாளாயினும் அவளை உள்ளேயிருந்து யாரோ உலுப்புவது போல இருந்தது.

“அது எப்படி கோவிலுக்கென்று காசு சேர்த்து சொந்தச் செலவு பாப்பாள்..?” என்றபடி பிள்ளையாரிடம் திரும்பியவள்

“எல்லாத்தையும் வாய்பாத்துக் கொண்டிரு.. இனி உனக்கு பூசையில்ல..” என்றாள்.

இது ஒரு தடவையல்ல. இந்தக் கிளைகள் இரண்டிலும் துருவுபலகை கிடையாது. ஆனால் சமையலுக்கு தேங்காய் மட்டும் ஒவ்வொரு பிரிவுக்கும் ஐந்து மூடை தேங்காய். ஒரு நாளைக்கு இதில் பெருமளவு தேங்காய்கள் வீணாகிப் போயின. பலர் தேங்காயெண்ணெய் காய்ச்சினார்கள்.

இதுவரை சோப், ஷம்போ, தலைக்கு எண்ணெய், பற்பசை ,பிரஸ், உள்ளாடைகள், மாத சுத்தி பாட் என்ற எதுவும் வழங்கப்படவில்லை. பார்வையிட வரும் பெற்றோரே பிள்ளைகளுக்கு இவற்றைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். ஆயினும் பெற்றோர் வறியவராகவும், பெற்றோர் இல்லாதவர்களாகவும் உள்ள பிள்ளைகள் இருந்தனர். தமது நிவாரணப் பொருட்களான அரிசி, மா போன்றவற்றை விற்று அந்தப் பணத்தைக்கொண்டு பிள்ளைகளைப் பார்க்க வருவோரும் இருந்தனர்.

இந்த அனுபவம் போதாதென்று அந்த திறந்தவெளிச் சிறையில் தமது பராமரிப்புக்கு தாமே பணம் செலுத்த வேண்டியிருந்தது. முதலில் துருவுபலகை வாங்க வீட்டுக்கு ஐம்பது ரூபா வீதம் ஐயாயிரம் ரூபா சேர்த்துக் கொடுத்தனர்.

அதில் கத்திகள், துருவுபலகை ஆயிரத்து ஐநூறு ரூபாவுக்கு வாங்கினர். மீதி இருக்கிறது என்று அறிவித்தாலும் அந்தப் பணத்துக்கு என்ன நடந்ததோ தெரியாது.

அடுத்து தொலைக்காட்சிப் பெட்டியை தந்துவிட்டு, அதற்கு ரோல்பிளக், ரிமோட், பற்றறி என்பவற்றுக்காக ஒரு ‘கலெக்சன்’ போட்டனர். மூவாயிரம் ரூபா சேர்ந்தது. பொருட்கள் ஆயிரத்து இருநூறு, மிகுதிப்பணம் ’சுவாகா’.

இங்கே இரண்டு நாட்களுக்கொருமுறை வரும் மீன், இறைச்சி என்பவற்றைப் பாதுகாக்க குளிர்சாதனப்பெட்டி இருந்தது. அதில் ஏதோ பழுது வந்துவிட்டது. “அதை சீர்செய்ய நாலாயிரம் ரூபா வேண்டும். நீங்க கலெக்சன் போட்டுதான் அந்தக்காசைத் தரவேணும்” என்றான் பொறுப்பதிகாரி.

லீடர்கள் வந்து இதைக் கூறியபோது அரசல் புரசலாக முணுமுணுப்பு எழுந்தது.

“எனக்கு ‘பிறிஜ்” வேண்டாம், நான் காசு தரமாட்டன்” என்றாள் ஒருத்தி.

“எங்கள வெளியால விடு, உங்கட சாப்பாடு எங்களுக்கு வேண்டாம்.”

“நீங்க என்னன்ரீ செய்யப் போறீங்க?” என்றாள் சந்திரா.

“எனக்குப் பணம் வாறதில்ல. நான் தரமாட்டன்.” என்றாள் பார்வதி.

பெரும்பாலும் பிள்ளைகள் மறுத்து விட்டனர். லீடர்மார் தமது நற்பெயரைக் காப்பாற்ற பிள்ளையாருடைய காசைத்திருடிக் கொண்டுபோய் கொடுத்துவிட்டனர். இது போனதோடு நிற்கவில்லை. கணினி பழகப் போன பிள்ளைகளுக்கு கதிரை கொடுத்தார்களாம். அவை புதியவை அல்ல, அவற்றில் இரண்டின் கால்கள் உடைந்துவிட்டன. அவர்கள் அதை வாங்கித் தரவேண்டுமாம். அவர்கள் ஒவ்வொருவரும் ’நான் உடைக்கவில்லை’ என்று மறுத்து விட்டனர். தண்ணீர் நிரப்பும் இரண்டாயிரம் லீட்டர் கொள்கலன் ஒன்று, நிறுத்திய பிழையால் சரிந்து நின்றது. பிள்ளைகள் அதன் அருகிலேயே லைனில் இருந்தனர். அப்போது நீர் சுமந்த பவுசர் வந்தது. பொறுப்பதிகாரியான மேஜர் பேசிக் கொண்டிருந்தான்.

அப்போது “ராங்க் சரிவா நிக்குது. அத நேரா வையுங்க” என்று ஒருத்தி சத்தமிட்டாள். திரும்பி பார்த்த மேஜர், எழுந்தவர்களைப் பார்த்து,

“அங்க இருக்க வேணாம்” என அதட்டினான்.

பவுசர்காரன் அப்படியே வைத்து நீரை நிரப்பினான். பாதியளவே விட்டவன் அதன் சரிந்த நிலையை கண்டுவிட்டு பக்கத்திலுள்ள மற்ற ராங்குக்கு நீரை நிரப்பினான். சரிந்த ராங்கின் குழாய்வழியாக நீர் அதிகம் சிந்தியது. பிள்ளைகளுக்கோ இந்த தண்ணீர் வீணாகப் போகிறதே என்ற கவலை. அவர்களுடைய முழுக் கவனமும் தண்ணீர்த் தாங்கியில் நின்றது. மேஜர் பேசியது எதுவும் யார் காதிலும் விழவில்லை. அன்றையதினம் பார்வதிதான் லீடராக இருந்தாள். மேஜர் போய்விட்டான்.

“உடன அந்த ராங்க் தண்ணிய பிள்ளையளுக்கு குடுங்கோ..” என சத்தமிட்டாள் பார்வதி.

தண்ணீர் விநியோகப் பொறுப்பில் நின்றவர்கள் ஒழுங்கமைக்க முயல, சற்று நேரம் எடுத்தது. இதற்குள் பாரிய சத்தத்துடன் இந்தக் கொள்கலன் நிலத்தில் விழுந்து பிரிந்தது, ஆயிரம் லீட்டர் தண்ணீரையும் நிலத்தில் பரப்பியது. நிலம் அவ்வளவு நீரையும் தனக்குள் மறைத்துக் கொண்டது. இன்னும் வெகு தொலைவுக்குப் போகாத மேஜர் நின்று திரும்பிப் பார்த்து விட்டு நகர்ந்தான்.

மாலையில் லைன் பார்வையிட வந்த மேஜர், “உடைந்து போன கொள்கலனுக்கான பணத்தை கலெக்சன்போட்டு வாங்கித்தாங்க” என்றான். பார்வதி, “கட்டாயம்” என்றாள். அதில் தெறித்த எள்ளலை அவனால் புரிந்த கொள்ளமுடியவில்லை.

“நாங்க வெளியில நிக்கைக்க இதைச் சொல்லியிருந்தா நல்லாக் கேட்டிருப்பன்” என்ற பார்வதியின் பேச்சை கேட்ட பக்கத்தில் நின்ற லீடர்,

“இவங்களுக்கு ரோசாக்கா நல்லா இடங் குடுத்துட்டா .அவதான் கேட்டதுக்கெல்லாம் காசு வசூல் பண்ணுறா”

“அவளுக்கென்ன நல்ல கொமிசன் இருக்கு செய்யிறாள். குடுக்கிற பிள்ளையளுக்கு அறிவு வேணுமே.”

“மூண்டு நாளைக்கொருக்கா பிள்ளையளைப் பாக்க வாற பெற்றோர் இருக்கினம். அவையட பிள்ளையள் மினரல் வோட்டர்தான் குடிப்பினமாம். ரெண்டு ரெண்டு அஞ்சு லீட்டர் போத்தலோட வருவினம்.”

“சம்பந்தமில்லாம உதையேன் கதைக்கிறாய்”

“இல்லை இவையப் பாத்ததான் மற்றவையும் பணக்காறர் எண்டு நினைக்கிறாங்கள் போல.”

“எட பணக்காறரெண்டா, இவைக்கு குடுக்கோணுமோ..?”எல்லாவற்றையும் பொறுமையாக கேட்ட பார்வதி எழுந்து தன் குடிலை நோக்கி நடந்தாள்.

“ என்ன மம்மி ஒண்டுஞ் சொல்லாம போறியள்.?”

“ என்னத்த சொல்லுற ? நான் குடுக்கவும் மாட்டன். மற்றவையட்ட கேக்கவும் மாட்டன்.” பார்வதி போய் விட்டாள் அவளுடைய முடிவே எல்லோரதும் முடிவு.

“என்னவோ, அவை தொழில் பயிற்சி தந்து நாங்களெல்லாம் அதில் உழைச்சுக்கட்டி வச்சருக்கிறம். பின்ன கேக்கினம்.”

“ஏறக்குறைய எட்டு ஒன்பது மாசமாச்சு என்ன செய்யிறம் இஞ்ச? பெரிய தளபதிகள், பொறுப்பாளர்மார் காயக்காறர், ஊனமடைஞ் சோர் பட்டியல் வழியாக விடுதலை செய்யப் பட்டு போயிற்றினம். அவை பிடிச்சுவிட்ட அப்பாவியளும், சாதாரண போராளியளும், இந்த செட்டிக்குளம் காட்டுக்குள்ள செட்டை வெட்டின பறவையளா கிடக்கிறம். எங்களுக்காக ஆர் குரல் குடுப்பினம்?”

பொருமலோடு உறங்கச் சென்றனர்.

# குழந்தைகளைக் குடும்ப வன்முறை பாதிக்குமா?

**புலம்பெயர்ந்த நாடுகளில் குடும்பவன்முறைகள் உச்சம் தொட்டுள்ளன. அதற்கான தீர்வினைப் பெறும் திட்டங்களை அரசுகள் வழங்கியிருந்தாலும் அவை குறைந்த பாடில்லை. குடும்ப வன்முறை காரணமாக தங்களது குழந்தைகளை கொன்று தாங்களும் உயிரை விட்ட சம்பவங்கள் பல உள்ளன. இவ்வாறான குடும்ப வன்முறைகளில் சிக்கித் தவிக்கும் குழந்தைகளின் மனநிலை குறித்து ’எதிரொலி’ வாசகர்களுக்கு பதிலளிக்கிறார் மனோதத்துவ நிபுணர் மருத்துவர் ரைஸ்.**




**கேள்வி: பெற்றோருக்கிடையில் நடக்கும் குடும்ப வன்முறை குழந்தைகளைப் பாதிக்குமா?**

பதில்: ஆம், நிறைய வழிகளில் பாதிப்பை ஏற்படுத்தலாம்

**கேள்வி: என்னென்ன பாதிப்புகள் நேரலாம்?**

பதில்: குடும்ப வன்முறையை அன்றாடம் பார்க்கும், அனுபவிக்கும் குழந்தைகளின் உடல் மற்றும் மனவளர்ச்சியில் தடுமாற்றம் ஏற்படலாம். குழந்தைகளுக்கும் பெற்றோருக்குமிடையில் இயற்கையாக இருக்கும் பாசப் பிணைப்பு பாதிக்கப்படுவதால் அவர்கள் பள்ளித் தோழர்களிடமும் மற்ற மனிதர்களிடமும் உறவாடும் விதத்தில் தடுமாற்றம் ஏற்படலாம். பிரச்சினையில் பாதிக்கப்படும் ஒரு பெற்றோருக்குச் சாதகமாகக்குழந்தை பரிந்து பேசினால், மற்ற பெற்றோரால் வெறுக்கப்படலாம் அல்லது தாக்கப்படலாம். இது குழந்தையின் மனதில் ஒரு குழப்பத்தையும் பாதுகாப்பில்லாமை போன்று உணரும் தன்மையையும் ஏற்படுத்தும். இதனால் அவர்களின் கவனம் சிதறி பள்ளிப் படிப்பும் பாதிக்கப்படலாம்.

அவர்களின் சுயமதிப்பில் சரிவு ஏற்படுவதோடு தன்னைச் சுற்றி இருப்பவர்கள் பற்றியும் உலகைப் பற்றியும் ஒரு எதிர்மறை எண்ணம் உருவாகலாம். அவர்கள் ‘எல்லோரும் என்னை வெறுக்கிறார்கள்’ எனும் மனநிலைக்குத் தள்ளப்படலாம். அதனால் மிகவும் அமைதியாகவும் யாருடனும் சேராமலும் ஒதுங்கியே இருப்பர்.

பிரச்சினைக்களுக்கிடையிலும் பிள்ளைகளை அரவணைக்கும் பெற்றோர் கூட குடும்ப வன்முறையின் பாதிப்பினால் குழந்தையைச் சரியாக கவனிக்க முடியாமல் போவதால் பல நேரங்களில் குழந்தை தனித்து விடப்பட்டது போன்று உணரலாம். இதை பாசப் புறக்கணிப்பு அல்லது ஒரு வகையான உணர்வு வன்முறை எனலாம். இதனால் சில குழந்தைகள் பள்ளிக் காலங்களிலேயே கூடா நட்பினில் நுழைந்து சில தவறான பழக்க வழக்கங்களில் ஈடுபடலாம். அது மட்டுமல்ல, வன்முறையையே பார்த்து வளரும் குழந்தை ஒரு புறம் சுயபச்சாதாபம் கொண்ட பதற்றமான, தன்னம்பிக்கையற்ற மனிதனாக மாறவும் மறுபுறம் ஒரு வன்முறையான மனிதனாகவும் மாறவும் கூட வாய்ப்பிருக்கிறது. குழந்தையாக குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் வளர்ந்த பிறகு தங்களது குழந்தைகளையும் வன்முறைக்கு ஆளாக்குவதாக பல ஆராய்ச்சிகள் சொல்கின்றன.

குடும்ப வன்முறையால் , குழந்தைகளுக்கு சிறு வயதில் இயற்கையாக, தானாக கூடிவரக்கூடிய, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, மனிதாபிமானம் மற்றும் தொடர்பாடல் திறன் போன்றவை வளராமல், அவர்கள் வளர்ந்த பிறகு அவர்கள் மிகவும் சிரமப்படுவர்.

குடும்ப வன்முறையைப் பார்த்து வளரும் குழந்தைகளுக்கு அதிகமாக மனஅழுத்தம், பதற்ற நோய் மற்றும் ஆளுமைக் கோளாறுகளும் வரவாய்ப்பிருக்கின்றன. பதின்ம வயதில், அவர்கள் பள்ளி படிப்பிலிருந்து முன்னமே விலகவும் வீட்டிலிருந்து வெளியேறவும் கூட வாய்ப்பிருக்கிறது. அது போல சில குழந்தைகள் தங்களது வயதை விட குறைவான வயதுடைய குழந்தைகள் போல நடந்துக் கொள்வார்கள். ஏனென்றால் தற்போதைய பருவத்தை விட அந்தச் சிறு இளம் பருவத்தில் அவர்கள் பாதுகாப்பாக உணர்ந்திருப்பதால் அவர்களின் மனம் அவர்களை அறியாமலே அதற்கு இழுத்துச் செல்கிறது.

ஏற்கனவே கற்றல் குறைபாடுகள் இருக்கும் குழந்தைகளின் குறைபாடுகள் கண்டறியப்படாமலே போக நேரிடலாம். அது மட்டுமல்ல, ADHD போன்ற கவனக் குறைவு நோய் இருக்கும் குழந்தைகளின் குறைபாடு அதிகமாக வாய்ப்பிருக்கிறது. அது மட்டுமல்ல, ஏற்கனவே பிரச்சினையின் மத்தியில் இருக்கும் பெற்றோர் இப்படிப்பட்ட குழந்தைகளின் நடவடிக்கைகளால் எளிதில் சீற்றம் கொண்டு அவர்களைத் தாக்கவும் செய்யலாம்.

மேலும் இது போன்ற சூழ்நிலையில் வளரும் குழந்தைகளுக்கு விற்றமின் குறைபாடுகள், நோய் எதிர்ப்புத் தன்மையில் குறைபாடு, தலைவலி , நாட்பட்ட வயிற்று வலி, தூக்கமின்மை போன்ற உடல் உபாதைகளும் ஏற்பட அதிக வாய்ப்பிருக்கிறது. சில குழந்தைகள் வளர்ந்த பிறகும் இரவில் தூக்கத்தில் சிறு நீர் கழிக்க ஆரம்பிப்பர்.

**கேள்வி: இந்தக்குழந்தைகளை இப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்து பாதுகாப்பது எப்படி?**

பதில்: பெற்றோரின் ஒத்துழைப்பு இல்லாமல் அது முடியாது. முதலில் பெற்றோருக்கு குடும்ப வன்முறையால் குழந்தைகள் எப்படி எல்லாம் பாதிக்கப்படுகிறார்கள் என உணர்த்த வேண்டும். அவர்களுக்குத் தேவைப்படும் உதவி கிடைக்கச் செய்ய வேண்டும். பள்ளி ஆசிரியர்களுக்கும் பள்ளி மனநல ஆலோசகர்களுக்கும் இதில் முக்கிய பங்கு இருக்கிறது. குடும்பத்தில் வறுமை இருந்தால் அதைக் களைய உதவலாம். பெற்றோருக்கு மனநோயோ போதைப் பழக்கமோ இருந்தால் அவற்றுக்கான உதவிகளை நாட வழி காட்டலாம். பாட்டி-தாத்தாவோ, மாமா- மாமியோ இருந்தால் அவர்களுக்கு விடயத்தைத் தெரிவித்து அவர்களால் முடிந்த அரவணைப்பை குழந்தைகளுக்குக் கிடைக்கச் செய்யலாம். குழந்தைகளை விளையாட்டுக் குழுக்களில் அல்லது கலை வளர்க்கும் கூடங்களில் சேர்த்து விடலாம். அவர்களுக்குத் தேவையான மனநல ஆலோசனை கொடுக்கலாம். ஆரம்பத்திலேயே இதனைக் கவனித்தால் நிறையப் பாதிப்புகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றலாம். இது பற்றி மேலும் தகவல் அறிந்துக் கொள்ள, 1800 RESPECT எனும் இனையத்தளத்தை நாடலாம். 180073732 எனும் எண்ணையும் தொடர்பு கொள்ளலாம்.


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Security Alarm
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transco CARGO

# Happy Sinhala & Tamil New Year!

අවුරුදු
SHIPPING SCHEDULE

| MONTH | FINAL CUT-OFF DATE | EST ARRIVAL IN SL |
|---|---|---|
| January | 2023-01-07 | 2023-02-17 |
| January | 2023-01-14* | 2023-02-24 |
| January | 2023-01-21 | 2023-03-03 |
| January | 2023-01-28* | 2023-03-10 |
| February | 2023-02-04 | 2023-03-17 |
| February | 2023-02-11* | 2023-03-24 |
| February | 2023-02-18 | 2023-03-31 |
| February | 2023-02-25* | 2023-04-07 |
| March | 2023-03-04 | 2023-04-14 |
| March | 2023-03-11* | 2023-04-21 |
| March | 2023-03-18 | 2023-04-28 |
| March | 2023-03-25* | 2023-05-05 |
| April | 2023-04-01 | 2023-05-12 |
| April | 2023-04-15 | 2023-05-26 |
| April | 2023-04-22* | 2023-06-02 |
| April | 2023-04-29 | 2023-06-09 |

* Only at Campbellfield & Dandenong Transco offices

If you want to send it
FASTER
Air Delivery within 4- 7 Days
with Free Door Delivery Anywhere in Sri Lanka

LIONXPRESS
POWERED BY TranscoCargo
Hotline 1300 187 267
www.lionaircouriers.com.au

45 Adrian Rd, CAMPBELLFIELD - (03) 9357 7228
206-208 Discovery Road, DANDENONG SOUTH - (03) 9703 2255

follow us on

We love to deliver

SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707 | CANBERRA - 02 62821905 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167

1300 1 TRANSCO (1300 187 267) | WWW.TRANSCOCARGO.COM.AU